பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 12 வெள்ளிக்கிழமை (28.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:32

# பெனாஸிர் பூட்டோ படுகொலை!

## தற்கொலைக் குண்டுதாரி கைவரிசை!!

### ராவல்பிண்டியில் கலவரம்; மக்கள் - படையினர் மோதல்
### ஜனாதிபதி பேர்வேஷ் முஷாரப் அவசர உயர்மட்டக் கூட்டம்

ராவல் பிண்டி, டிசெம்பர் 28

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும், மக்கள் கட்சியின் தலைவியுமான பெனாஸிர் பூட்டோ (வயது - 54) பிரசாரக் கூட்டம் ஒன்றில் வைத்து தற்கொலைக் குண்டுதாரியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பிரசார உரையை ஆற்றிய பின்னர் அவர் மேடையைவிட்டு இறங்கி வெளியே நின்ற காரில் ஏறச் சென்றவேளை, தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் பெனாஸிரைக் கழுத்தில் சுட்டுவிட்டு, குண்டை வெடிக்கவைத்தார். அதனால் பொதுமக்கள் 16பேர் பலியாகினர்.





பெனாஸிரின் கொலையை அடுத்து ராவல்பிண்டியிலும் அதனை அடுத்து நாடளாவிய ரீதியிலும் பெரும் கலவரம் வெடித்தது. பல இடங்களில் பொதுமக்களும் படையினரும் மோதிக் கொண்டனர்.

ஜனாதிபதி பர்வீஸ் முஷாரப் தமது உயர்மட்டக் குழுவை நேற்று அவசர அவசரமாகக் கூட்டி தேர்தலை ஒத்திவைப்பது குறித்து ஆராய்ந்தார்.

படுகாயமடைந்த பெனாஸிர் பூட்டோவை ராவல் பிண்டி வைத்தி சாலைக்கு கொண்டுசென்றபோதும், அங்கு சிகிச்சை பலனளிக் காது அவர் மாலை 6.16 மணிக்கு உயிரிழந்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி பாகிஸ்தானில் நடை பெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடவிருந்த பெனாஸிர் பூட்டோ, பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். அந்த வகையில் நேற்று ராவல்பிண்டியில் உள்ள பூங்காவில் பல்லாயிரக்கணக்கான மக் கள் மத்தியில் உரையாற்றிவிட்டு (12ஆம் பக்கம் பார்க்க)

### உலக நாடுகள் கண்டனம்

இஸ்லாமாபாத், டிசெ. 28

பாகிஸ்தானின் எதிர்க்கட்சித் தலைவி யான பெனாஸிர் பூட்டோவின் படுகொலைக்கு எதிராக உலக நாடுகள் கண்டனத்தை தெரி (12ஆம் பக்கம் பார்க்க)

# ரூபவாஹினி அலுவலகத்தில் மேர்வின் அடாவடி!
# ஊழியர் தாக்கியதில் அவரது மண்டை உடைந்தது!!

கொழும்பு, டிசெம்பர். 28

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்துக்குள் நேற்றுக்காலை தமது மெய்ப்பாதுகாவலர்கள், பரிவாரங்கள் சகிதம் நுழைந்த தொழில் உறவுகள் மற் றும் மனித வள பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா, செய்திப்பணிப் பாளரைத் தாக் கியதைத் தொடர்ந்து ரூபவாஹினி ஊழி யர்களினால் தாக்கப்பட்டார்.

சுமார் மூன்று மணிநேரம் கூட்டுத் தாபன ஊழியர்களுக்குப் பயந்துபோய் அறை ஒன்றுக்குள் ஒளிந்திருந்த அமைச் சர் மேர்வின் சில்வாவை இராணுவத்தி னரும் பொலிஸாரும் கடும் பிரயத்தனத் துக்கு மத்தியில் வெளியே கூட்டி வந்தவேளை, ஆவேசத்துடன் சூழ்ந்துகொண்ட ஊழியர் கள் பொலிஸாரின் எதிர்ப்பையும் மீறி அமைச்சரை நையப்புடைத்தனர் - என்று தெரிவிக்கப்பட்டது.

மண்டை உடைந்து இரத்தம் பீறிட்ட நிலையில், ரூபவாஹினி ஊழியர்களின் கூச்சல்கள், நையாண்டிகளுக்கு மத்தியில் - இராணுவத்தினரால் அங்கிருந்து கூட்டிச் செல்லப்பட்டார் அமைச்சர். அமைச்சரின் குழுவில் இடம்பெற்றிருந்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

(11ஆம் பக்கம் பார்க்க)



### முல்லைத்தீவில் நேற்று விமானத் தாக்குதல்

கொழும்பு, டிச.28

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிர தேசமான முல்லைத்தீவில் நேற்று விடிகாலை விமானத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவின் வடக்கே வெல்லமுள்ள வாய்க்கல் பகுதியில் நேற்று விடிகாலை 6.10 மணியளவில் விமானப் படையினர் இந்தத் தாக்குதலைத் தொடுத்தனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வவுனியாவில் கிளைமோர் தாக்குதல் நால்வர் பலி; மூவர் ஈ.பி.டி.பியினர்

வவுனியா, டிச. 28

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குத லில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மூவரும் சிறுமி ஒருத்தியும் உயிரிழந்துள்ளனர். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

பெண்ணொருவரால் நிறுத்திவைக்கப் பட்டிருந்ததாக நம்பப்படும் சைக்கிளில் பொருத்திவைக்கப்பட்டிருந்த கிளைமோர்க் குண்டே நேற்று மதியம் 1.45 மணியளவில் வெடிக்கவைக்கப்பட்டதாக முதற்கட்ட விசா ரணைகளிலிருந்து தெரியவந்திருக்கின்றது.

வவுனியா - மன்னார் வீதி, குருமன்காட் டுச் சந்தியில் பொலிஸ் பாதுகாப்புடன் வாக னத்தில் வைத்து 'தினமுரசு' விநியோகித்துக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு வழமைபோல்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ். குடாநாட்டிலும் தீவிகப் பகுதிகளி லும் வழமைபோல் நேற்றிரவு 9 மணிக்கு நடை முறைக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 4.30 மணிக்கு தளர்த்தப்படவுள் ளதாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலை மையகம் நேற்று இரவு அறிவித்தது. (அ-2)

## மூன்று படையினர் முகமாலையில் பலி; சிப்பாய் ஒருவரின் சடலம் புலிகள் வசம்

கிளிநொச்சி, டிச. 28

முகமாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடை யில் ஏற்பட்ட மோதலில் 3 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந் துள்ளனர் என்று விடுதலைப் புலிகள் அறி வித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலை கள் மீது நேற்றுக்காலை முன்னேறித் தாக்கு தல் நடத்த முற்பட்ட இராணுவத்தினர் மீது தாங்கள் பதில் தாக்குதல் நடத்தினர் என் றும் அதன் பின்னர் மேற்கொண்ட தேடுத லின்போது இராணுவத்தினரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டதாகவும் புலிகள் தரப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

முகமாலை முன்னரங்கப் பகுதியில் இருந்து நேற்றுக்காலை 6.15 மணியளவில் முன்னேறிய படையினர் விடுதலைப் புலி களின் மூன்று பதுங்குகுழிகளை அழித் ததுடன் மூன்று புலி உறுப்பினர்களையும் கொன் றனர் என ஊடகத் தகவல் நிலையம் அறி வித்துள்ளது.

பின்னர் மற்றொரு பதுங்கு குழியையும் படையினர் அழித்தனர் என்றும் தெரிவிக் கப்பட்டது.

கிளாலியின் புலிகளின் நடமாட்டத்தை (12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடலியடைப்பைச் சேர்ந்த, ஈழத்தின் மூத்த தவில் கலைஞர்



திருவாளர்

### நடேசன் ஜெயராமன்

அவர்கள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் "கலாபூஷணம்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையையிட்டு அவரைப் பாராட்டி விநாயகரின் அருளால் மேலும் பல விருதுகளைப் பெற்று தவில் கலைக்கு வளஞ் சேர்க்க வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம்.

சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார் குடும்பத்தினர்.
சங்கானை.

(69448)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் ஈன்ற சண்முகனே - உமக்காக
எம்மவரின் பண்பாட்டின்
கலையனைத்தின் தொன்மையிலே
ஊறிய எம் கண்ணியத்தை
காப்பதற்காய் கனவானாய் உயர்ந்திட்டீர்

எப்படி நாம் வாழ்த்தினாலும்
வார்த்தைக்குப் பஞ்சமப்பா
உற்றவர்கள் மற்றவர்கள்
உறவினர்கள் மட்டுமன்றி
கற்றவர்கள் அனைவரதும்
கனவானாய் உயர்ந்திட்டீர்
எப்போதும் உம் பணி - எம்
மண் மீது நிலைத்திடவே
நல்லூரரான் வரம் வேண்டி
வாயார வாழ்த்தி நிற்கும்....

அண்ணா ருத்ரா,
அக்கா கமலா,
புவனலோஜினி - நடராஜசிவம்,
தாரிணி, கிரிதரன்.

4, செட்டித்தெரு,
நல்லூர்.




## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### பரமசாமி பாக்கியராஜ்

அன்னை மடியில்
12✱12✱1985

ஆண்டவன் மடியில்
25✱12✱2006

திதி: பஞ்சமி
28.12.2007

உலகைவிட்டு மறைந்தாலும் எங்களுள் நீ வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறாய்.

உனது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பரேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி.

68, சீனிவாசகம் றோட்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

அப்பா, அம்மா,
அண்ணன்மார், தங்கை.

(69452)

## சுகாதாரத் திணைக்களத்தில் வருடாந்த ஒன்று கூடல்

யாழ்ப்பாணம் டிசெ.28

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் வருடாந்த இறுதி ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பணிமனை மண்டபத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சுகாதாரத் திணைக்களத்தில் நீண்டகாலம் பணியாற்றி தமது சேவையை நிறைவு செய்யும் 67 வயதுக்கு மேற்பட்ட வைத்திய, பதிவு வைத்தியஅதிகாரிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் அண்மையில் நியமிக்கப்பட்டு தமது கடமையை பொறுப்பேற்றுக் கொண்ட 14 வைத்திய அதிகாரிகள் வரவேற்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் கலந்து கொள்வார்.

இவ்விழாவிற்கு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வைத்திய நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளும் சர்வதேச தொண்டு நிறுவன பிரதிநிதிகளும் அரச சார்பற்ற தொண்டு நிறுவன பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளார்கள். (1)

## தீவகக் கல்வி வலய ஆசிரியர், மாணவர்களுக்கு...

யாழ்ப்பாணம் டிசெ.28

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களை எதிர்வரும் திங்கட்கிழமை தத்தமது பாடசாலைகளுக்கு சமுகமளித்து தமக்குரிய புதிய பாட நூல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வலய அதிபர்கள் கேட்டுள்ளனர்.

அன்றையதினம் ஆசிரியர்களையும் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (202)

## கூட்டுவுச் சங்கங்களின் பிரச்சினை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம் டிசெ.28

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கூட்டம் கடந்த புதன் கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எ.சுப்பிரமணிய சர்மா கலந்து கெண்டு சங்கங்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான எஸ்.சிவலிங்கம், கே.கனகசபாபதி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பனை தென்னை அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (1-224)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம் டிசெ.28

நவாலி அட்டகிரி திருச்சாத்தான் மலைப்பதி சிவன் தேவஸ்தானத்தில் நாளை சனிக்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 4.30 மணிவரை திருவாசக முற்றோதல் இடம்பெறும். (1-95)

## வீடு வாடகைக்கு

இரண்டு அறைகள், சமையலறையுடன் கூடிய வீடு டச்சு வீதி, கோப்பாய் தெற்கில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
(சனி, ஞாயிறு தினங்களில்)
கு.சுப்பையா,
28, டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.

(69455)

## விற்பனைக்குண்டு

சன்டெல் தொலைபேசி உடன் விற்பனைக்குண்டு

## தேவை

அச்சக நிறுவனமொன்றுக்கு DTP வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் 375/7, முத்துத்தம்பி லேன், இலுப்பையடி, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(69453)

## தவறிவிட்டது

சித்தியம்புளியடி கிழக்கு, தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தசாமி ரவீந்திரராஜா என்பவருடைய தே.அ.அ.இல (822931529V), விசேட அ.அ.இல (0907001458), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன சுன்னாகத்திற்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் [illegible] [illegible] விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (சன்மானம் வழங்கப்படும்).

(69443)

## பெண்களுக்கான விடுதி வசதி

யா/இராமநாதன் கல்லூரியில் மாணவிகள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு சகல வசதிகளுடன் விடுதி வசதி செய்து கொடுக்கப்படும். சகல வகுப்புக்களுக்கும் அனுமதிகள் வழங்கப்படும். விரும்புவோர் 14.01.2008ற்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.

உப-அதிபர்,
இராமநாதன் கல்லூரி.

## Talent Study Corner

50, வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்

பெற்றோர்களே!

**வழமையான Tuition முறைக்கு முற்றிலும் மாறுபட்ட குழு முறையில் சுயகற்றல் செயற்பாடு**

- விஞ்ஞான ஆய்வுகூட வசதி
- நவீன கற்பித்தல் சாதனங்கள்
- ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் விசேட கற்பித்தல் முறையில்
- ஏனைய பாடங்களிற்குச் சுயகற்றல்வழிகாட்டல்
- தேர்ச்சித்திறனும் பண்புசார் விருத்தியும் வளர்க்கப்படும்
- சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் வகுப்புகள்
- 10 பேரை மட்டும் கொண்ட விசேட வகுப்பறை

யாழ்.நகரில் புது முயற்சியாக 29.12.2007 (சனி) ஆரம்பம்

தரம் 09, 10 மாணவர்களுக்கு மட்டும் அனுமதிகள்...

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளலாம்

T.P.No.: 021 222 9815

(பெருமாள் கோவிலடி Science College முன்னால்) - நிர்வாகி.

(69456)

## கண்ணீர் அஞ்சலி

அன்புடனும் இனிமையுடனும் எம்முடன் பழகிய

### திருமதி புஸ்பமணி இராமநாதன்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்ததுடன் ஆற்றொணாத் துயரடைந்தோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தனின் பாதார விந்தங்களையும் அடைவராக.

அன்னார் தன் கணவரின் பற்பல அறப்பணிகளுக்கும் உறுதுணையாய் இருந்து நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்ததுடன் கணவரின் உறவுகள், நட்புகள் சிறப்புறவும் உற்றதுணையாக இருந்தார். திரு.வி.பொ.இராமநாதன் அவர்களுக்கும் அன்னாரின் பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்(K.K.K)
யாழ்ப்பாணம்.

(69459)

## கண்ணீர் அஞ்சலி



### வ.யோசேப் மருசலீன்

(இளைப்பாறிய உத்தியோகத்தர், இ.போ.ச. - யாழ்ப்பாணம்)

தவசிகுளம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் தற்போது 33, புனித லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட வ.யோ.மருசலீன் 26.12.2007 இல் காலமான துயரச்செய்தி கேட்டு கவலையடைந்தோம்.

நாம் வேம்பொடுகேணி, பளையிலிருந்து நிர்க்கதியாக தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தபோது இல்லிடம் தந்து ஆதரித்த தங்களின் உயர்வான பணியை நினைத்து உருகுகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அஞ்சலியைத் துயரத்துடன் தெரிவிக்கின்றோம்.

"பவளகிரி",
தவசிகுளம், மிருசுவில். (ஓ/54832)

முருகமூர்த்தி துரை
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் யோகநாதன் (மூத்தண்ணை)



மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகம் யோகநாதன் 25.12.2007 செவ்வாய்க்கிழமை டோகாவில் இயற்கை எய்தினார்.

அன்னார் சண்முகம் - அருளம்மா தம்பதியரின் மகனும் பத்மறஜனியின் அன்புக் கணவரும் பத்மநாத் (பழைய மாணவன், மகாஜனக் கல்லூரி), மேரி மில்றாயினி (பழைய மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி), செபஸ்ரியன் (ஸ்கந்தவரோதயா கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருள் அகம்,
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (ஓ/54834)

தகவல்:
சா.இராசரத்தினம்
(மைத்துனர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.பல்கலைக்கழகத்தின் 6ஆவது துணைவேந்தராகப் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றார். பதவியேற்பு நிகழ்வில பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திகரக் குருக்களிடம் துணைவேந்தர் ஆசிபெறுவதை முதலாவது படத்திலும் -
புதிய துணைவேந்தரை பேரவை உறுப்பினர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர் ஆலயத்திலிருந்து அழைத்து வருவதை இரண்டாவது படத்திலும் துணைவேந்தர் தமது பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பணிகளை ஆரம்பிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# கொடிகாமத்தில் சட்டவிரோதமாகக் கசிப்பு விற்றவர் அபராதத்துடன் எச்சரித்து பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

கொடிகாமம் வடக்குப் பகுதியில் சட்ட விரோதமாகக் கசிப்பு விற்பனையில் ஈடு பட்டவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு, கடுமை யாக எச்சரித்தும் பிணையில் செல்ல அனு மதித்தது.

சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக இரு வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் தாக் கல் செய்யப்பட்டு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

2லீற்றர் கசிப்பினை விற்பனை செய்ய வைத்திருந்தமை தொடர்பாகத் தொடரப் பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அப் ராதத் தொகை செலுத்தத் தவறின் 10மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட் டார்.

1லீற்றர் கசிப்பு விற்பனைக்கு வைத் திருந்தமை தொடர்பாக தொடரப்பட்ட இரண்டாவது வழக்கினை விசாரித்த நீதி வான் 30ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் பத்துமாத சிறைத் தண்டனை அனுபவிக்கு மாறும் உத்தரவிட்டார்.

அத்துடன் 10ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா பெறுமதி யான நீதிமன்றினால் ஏற்கக்கூடிய இரு ஆள் பிணையிலும் இரண்டு வருட நன் னடத்தைப் பிணையிலும் செல்ல அனு மதித்தார்.

மேலும் இக்காலப் பகுதியில் நேரடியா கவோ மறைமுகமாகவோ சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனவு, இடத்துக்கு இடம் கொண்டுசெல்லல், தம்வசம் வைத் திருத்தல், கடத்தல் ஆகிய குற்றச் செயல் களில் ஈடுபடமாட்டேன் என பிணை முறி நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை தினமும் முற்பகல் 10 மணிக்கும் 4 மணிக் குமிடையில் நீதிமன்றில் கையொப்பமி டல் வேண்டுமெனவும் மேற்கூறிய நிபந் தனைகளை மீறின் வழங்கப்பட்ட பிணை ரத்துச் செய்யப்படுமெனவும் உத்தரவிட் டார். (அ-1-207)

# வேம்பிராய் இந்து மயானச் சூழலில் கற்பாறைகளும் மக்கியும் அகழ்வு

## சுற்றுச்சூழல் பாதிப்புறும் என பிரதேச மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

சாவகச்சேரி வேம்பிராய் இந்து மயா னத்திற்கு அண்மையில் தினமும் கற்பாறை களும் மக்கியும் அகழ்ந்தெடுக்கப்படுகின் றன. இதினால் சூழலில் பாதிப்பு ஏற்படுவ தாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

மேற்படி இந்து மயானத்திற்கு அண்மை யில் பெருமளவில் கற்பாறைகளும் மக்கி களும் காணப்பட்டன. இவை தினமும் சட்டவிரோதமாக உழவு இயந்திரங்களி லும் லொறிகளிலும் ஏற்றிச் செல்லப்படு கின்றன.

இதனால் வேம்பிராய் இந்து மயானத் திற்கும் பெரும் பாதிப்பு ஏற்படலாம் என பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரிப் பிரதேச சபைக்குச் சொந்த மான இந்தப் பகுதியிலிருந்து சபையின் அனுமதியின்றி இவை அகழ்ந்து செல்லப் படுவதாக முறையிடப்படுகின்றது.

எனவே பிரதேச சபையின் அனுமதி யைப் பெற்றே கற்பாறை மற்றும் மக்கியை குறிப்பிட்டளவில் அகழ்ந்தெடுக்குமாறு பிரதேச சபையின் செயலாளர் வே.சிவ ராஜ லிங்கம் அறிவுறுத்தியுள்ளார். (202-131)

# கலாசாரப் பேரவையில் உறுப்புரிமை பெறலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவை யின் உறுப்புரிமை பெறவிரும்புகின்ற தென்மராட்சிப் பிரதேச கலைஞர்கள், எழுத் தாளர்கள், நலன்விரும்பிகள், கலை ஆர்வலர் கள் ஆகியோர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு பேரவையில் உறுப்புரிமை பெற்றவர்கள் 2007ஆம் ஆண் டுக்கான உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ள பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (202-70)

# 'தடங்கள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ். பல்கலைக்கழக முதுகலைமாணி அபிவிருத்தி மாணவர்கள் 'தடங்கள்' என் னும் நூலை வெளியிட்டு வைத்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக முகாமை விரிவு ரையாளர் ஆ.சரவணபவன் தலைமையில் பொருளியல் மண்டபத்தில் இந்நூலின் வெளியீட்டு விழா நடைபெற்றது.

முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவாநாதன் பெற்றுக்கொண்டார். (202-95)

# வலி.தென்மேற்கில் 'பற்றரி' தட்டுப்பாடு

வலி.தென்மேற்கு,டிசெ.28

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 'பென் ரோச் பற்றரி'களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் மணிக்கூடுகள், சிறிய ரக வானொலிப் பெட்டிகள் போன்றவற்றைப் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதா கப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக் கின்றனர். (202-135)

# இலவச வகுப்புகள்

இருபாலை,டிசெ.28

இந்து கலாசரத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் இலவச யோகாசனப் பயிற்சி வகுப்புகளின் புதிய பிரிவுகள் எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளன.

ஆண்கள், பெண்கள் மற்றும் நோயா ளர்களுக்கு தனித்தனியாக நடைபெறும் இந்த யோகாசன வகுப்பில் இணைந்து கொள்ளவிரும்புவோர் நல்லூர் ஆலய முன் றிலிலுள்ள நல்லூர் நாவலர் மணி மண் டபத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-79)

* * *

இருபாலை,டிசெ.28

இந்து கலாசாரத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் இல வச நுண்கலை வகுப்புக்களின் புதிய பிரிவு கள் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

வாய்ப்பாட்டு, வயலின் மற்றும் மிரு தங்க வகுப்புக்களிலேயே புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்த வகுப்பில் இணைய விரும்பு வோர் நல்லூர் ஆலய முன்றிலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் தமது பதிவு களை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது. (202-79)

வலி.தென்மேற்கில்

# வீதிப் புனரமைப்புப் பணிகள் தாமதம்; தார் வந்து சேராமையே இதற்குக் காரணம்

## பிரதேச சபை விளக்கம்

வலி.தென்மேற்கு,டிசெ.28

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமைச் செயலகம் ஏற்கனவே திட்டமிட் டிருந்தபடி வீதிப் புனரமைப்புப் பணிகளை இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்ய முடிய வில்லை.

புனரமைப்புப் பணிக்குத் தேவையான தார் இதுவரை வந்துசேராமையே இதற்குக் காரணம் எனப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

தார் கொள்வனவுக்கென கடந்த மார்ச் மாதத்தில் நிறுவனம் ஒன்றுக்கு 18 லட் சத்து 30ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் திலிருந்து தாரைப் பெற்று இங்கு கொண்டு வந்து சேர்ப்பதற்காக இந்த நிதி நிறுவனம் ஒன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.




ஆனால், இதுவரை - இந்த வருடம் முடி வடையப் போகும் நிலையில் - தார் கிடைக் காததால் வீதி புனரமைப்புப் பணிகள் எத னையும் நிறைவேற்ற முடியாத நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி பலாலி இராணுவ உயர் அதி காரியின் கவனத்திற்கும் கலந்துரையாடல் ஒன்றின்போது கொண்டுவரப்பட்ட போது தாரை இங்கு கொண்டு வருவதற்கான உறுதிமொழி அவரால் வழங்கப்பட்டிருந் ததாகவும் ஆனால் இதுவரை தார் சபைக்கு கிடைக்கவில்லை என்றும் சபையின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை -

தங்கள் தங்கள் பகுதி ஒழுங்கைகளும் வீதிகளும் புனரமைக்கப்படவில்லை என் றும் இதனால் இவை சேறும் சகதியுமாக நீண்ட காலமாகத் திருத்தப்படாத நிலை யில் போக்குவரத்து செய்வதற்கு மிகுந்த சிரமமாக இருப்பதாகவும் பொது நிறுவ னங்களும் பொது மக்களும் தினமும் சபைக்கு முறையிட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-135)

# சுழிபுரம் கிழக்கில் மலசல கூடங்கள் அமைப்பு

சுழிபுரம் கிழக்கு ஜே/174 கிராம அலு வலர் பிரிவில் 'கமநெகும' திட்டத்தின் கீழ் 15 மலசல கூடங்கள் அமைக்கப்பட வுள்ளன. அத்துடன் 11 மலசல கூடங்கள் புனரமைப்புச் செய்துகொடுக்கப்படவுள்ளன. (202-135)

# கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.28

இலங்கை கரபந்தாட்டச் சம்மேளனம் 'மஞ்சி பிஸ்கட்' நிறுவனத்தின் அனு சரணையுடன் பிரதேச, மாகாண, தேசிய மட்டங்களில் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி களை நடத்தவிருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங் கள் தமது விண்ணப்பங்களை இல.37, இராசவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நாளை சனிக்கிழமைக்கு முன் அனுப்புமாறு சம்மேளனத்தின் யாழ்.கிளை பொருளாளர் க. ஏகாம்பரம் கேட்டுள்ளார். (1)

# 435 கிராம அலுவலர் பிரிவுகளில் 141 பதவிகளே வெற்றிடமாகவுள்ளன

## நிலைமகளை அனுசரித்து செயற்படுமாறு செயலர்களுக்கு அரச அதிபர் பணிப்புரை

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.மாவட்டத்தில் 435 கிராம அலு வலர் பிரிவுகள் உள்ளன. அவற்றில் 141 பிரிவுகளுக்கான கிராம அலுவலர் பதவி கள் வெற்றிடமாகவுள்ளன என யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தகவல் வெளியிட் டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதிய 'உதயனில்' வெளியாகிய குடாநாட்டில் பணியில் இருப் போரை விட கிராம சேவையாளர் வெற்றி டங்களே அதிகம் என்னும் செய்தி தொடர் பாக அனுப்பிவைத்துள்ள விளக்கக் குறிப்பி லேயே இத்தகவலை அவர் வெளியிட் டுள்ளார்.

மேற்படி செய்தி தொடர்பாக அரச அதி பர் சகல பிரதேச செயலர்/ உதவி அரச அதிபர்களுக்கு அறிவுறுத்தல் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது-

சகல பிரதேச செயலர்/உதவி அரச அதிபர்களும் தங்கள் பிரிவில் தற்பொழுது வெற்றிடமாகவுள்ள கிராம அலுவலர் பிரி வின் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு செயற்படுவதை உறுதிப்படுத்தவேண்டும்.

வாரந்தோறும் புதன்கிழமைகளில் காலை 9 மணிக்கு கிராம அலுவலர்கள் பிரதேச செயலர்/ உதவி அரச அதிபர் அலுவலகங் களுக்குச் சமுகமளிக்கவேண்டும். தற் போதைய சூழ்நிலையில் மக்கள் தங்கள் அலுவலகங்களில் காத்திருப்பதைத் தவிர்க்க கிராம சேவையாளர்கள் குறிப்பிட்ட நேரத் தில் சமுகமளித்திருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (202)

# உடற்கல்விச் செயலமர்வு

வலி.வடக்கு,டிசெ.28

உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகி யோருக்கு இரண்டு நாள் செயல்முறைக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

மஹிந்த சிந்தனையை அமுல்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை மாண வர்களின் உடற்தகைமைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அண்மை யில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்கு வதுடன் திடகாத்திரமான சமூகத்தை உரு வாக்குவதும் இப்பயிற்சிக் கருத்தரங்கின் நோக்கமாகும்.

வடமாகாண கல்வி அமைச்சில் இருந்து வருகை தந்த உடற்கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன், வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் மு.நடராசா ஆகியோர் வளவாளராகக் கடமையாற்றினர்.

இந்தப் பயிற்சி வகுப்பில் வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து 15 பேரும் யாழ். கல்வி வலயத்தில் இருந்து 15 பேரும் தீவ கக் கல்வி வலயத்திலிருந்து 8 பேரும் வட மராட்சி கல்வி வலயத்தில் இருந்து 8 பேரும தென்மராட்சியில் இருந்து ஒருவரும் கலந்து கொண்டனர். (202-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை கடற்கரைச் சேனையில் திட்டமிட்ட குடியேற்றத்துக்கு முஸ்தீபு!

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.28

திருகோணமலை பிரதேசத்தின் தமிழ்க் கிராமங்களில் ஒன்றான கடற்கரைச் சேனையில் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையாக சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்படுகின்றது எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் நேற்று முன்தினம் (புதன்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இராணுவத்தினது வலிந்த த்தாக்குதல் நடவடிக்கையினால் திருகோணமலை கடற்கரைச்சேனை பகுதியிலிருந்து கடந்த ஆண்டு தமிழ் மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். 2006ஆம் ஆண்டு அனைத்துலகம் பார்த்துக் கொண்டிருக்க இராணுவத்தின் திட்டமிட்ட ஷெல்த் தாக்குதலில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன் காயங்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

அரசினது இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையாக தமிழர்களின் அப்பாரம்பரிய பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதனால், தமிழ் மக்கள் தங்களது சொந்தக் கிராமங்களில் மீண்டும் குடியேற இயலாத வகையில் தடுக்கப்பட்டனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்பட்டு கடற்கரைச் சேனையில் 25 சிங்கள கிராமங்களைச் சேர்ந்தோர் குடியேற்றப்பட்டுள்ளனர்.

கிழக்கில் தமிழ் மக்களை வலிந்து வெளியேற்றிவிட்டு சிறு அளவில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கிவிட்டு பின்னர் அதனை யாருக்கும் தெரியாமல் படிப்படியாக விரிவாக்கம் செய்து வரும் சிங்களக் குடியேற்றத்தின் வெளிப்பாடுதான் இது.

1985ஆம் ஆண்டு திருகோணமலை திரியாய் கிராமத்தில் தமிழ் மக்களை படுகொலை செய்து அழித்துவிட்டு அப்பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கியமை என்பது அரசின் சிங்களக் குடியேற்றங்களில் ஒரு உதாரணமாகும்.

திரியாயில் 1985ஆம் ஆண்டு ஜூன் 8ஆம் திகதி வாகனங்களில் சென்ற இராணுவத்தினர் தாங்கள் சுடுவதற்கு முன் அங்கிருந்து தமிழ் மக்கள் வெளியேற வேண்டும் என எச்சரித்தனர். 1,100 வீடுகளை எரித்தனர். இதனையடுத்து அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியிருந்தனர். 1985 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5ஆம் திகதி இடம் பெயர்ந்திருந்த மக்கள் மீதும் தாக்குதல் நடத்தினர். அத்தாக்குதலில் 10 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். தொடர்ந்து ஓகஸ்ட் 14ஆம் திகதி பஸ் ஒன்றில் 6 பொதுமக்கள் ஏற்றப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டனர். இராணுவ வன்முறையால் தமிழர்கள் படிப்படியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். தமிழர்கள் வெளியேறிய உடன் அப்பகுதியில் சிங்களவர்களைக் கொண்டு படிப்படியாக குடியேற்றங்களை உருவாக்கினர்.

இத்தகைய நடவடிக்கையானது ஒரு இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையே. பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## தெல்லிப்பழைக் கோட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.28

பின்தங்கிய மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாக பரிகாரக் கல்விப் பயிற்சி வலி.வடக்கு தெல்லிப்பழை கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இப் பரிகார கல்வித்திட்டம் வலிகாமம் கல்வி வலயத்தில் சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்திலும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் கோப்பாய் கல்வி கோட்டத்திலும், தீவகம் கல்வி வலயத்தில் ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்திலும் -

வடமராட்சி கல்வி வலயத்தில் பருத்தித்துறை கல்வி கோட்டத்திலும் தென்மராட்சியிலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த வகையில் மேலதிகமான வலி. வடக்கு கல்விக் கோட்டத்திலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலம், தமிழ, ஆரம்பபிரிவு, கணிதம், விஞ்ஞானம், சமயம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே இப்பயிற்சி வழங்கப்பட்டது. (202)


**IIS COMPUTER COURSES**

Admissions Open - January 2008

New Batches Start on:-
Batch 1: 04/01/2008 Batch 2: 05/01/2008
Batch 3: 23/01/2008 Batch 4: 26/01/2008

Course:-
1.Diploma in Microsoft Office
2.Diploma in Desk Top Publishing
3.Diploma in Internet Technology
4.Diploma in Hardware Technology
5.Diploma in Computer Programming
6.Diploma in Eng.Drawing & AutoCAD
7.Diploma in Computerized Accounting
8.Certificate in Java Programming
9.Certificate in Visual C Programming
10.Certificate in Visual Basic Programming

50%

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100,Clock Tower Road, Jaffna.
T.P.No:-021 222 2831



**மிகவும் குறைந்த கட்டணத்தில்**

வெளிநாட்டுப் பொதிகள் (Parcel)சேவை பின்வரும் நாடுகளுக்கு

| | 1 கிலோ | 2 கிலோ |
|---|---|---|
| அமெரிக்கா, கனடா | 2,600/= | 4,000 /= |
| பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், இத்தாலி, கொலண்ட், நோர்வே, சுவீடன், டென்மார்க், ரஷ்யா, நியூசிலாந்து, ஆஸ்ரேலியா | 1,800/= | 3,000/= |
| மத்திய கிழக்கு நாடுகள்: சவூதி அரேபியா, டோகா கட்டார் - ஓமான், குவைத், துபாய், ஜோர்டான் மற்றும் இந்தியா, மலேசியா | 1,400/= | 2,200/= |

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு அனுப்ப வேண்டிய உடை, உணவு, அலங்காரப்பொருள்கள், வீடியோ, கடிதங்கள், ஆவணப்பத்திரங்கள் ஆகியவற்றை எம்மூலமாக அனுப்பலாம்.

தொடர்புகளுக்கு: **RAINBOW TRAVELS & TOURS,**
இல. 32, 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல 021 222 3237
(ராஜா கிறீம் கவுஸுக்கு அருகில்). (69232)


## வீதி சேதம்: திருத்தித் தரக் கோரிக்கை

நவாலி,டிசெ.28

ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையிலிருந்து சுதுமலை செல்லும் மாப்பியன் வீதி 42 வருடங்களாகப் புனரமைக்கப் படாமலுள்ளது. இதனால் இவ்வீதியால் செல்லும் பயணிகள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இவ்வீதியால் தினமும் நூற்றுக்கணக்கானோர் பயணம் செய்து வருகின்றனர். இதனைப் புனரமைத்துத் தருமாறு பிரதேசத்திலுள்ள பொது நிறுவனங்களும் பொது மக்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர்களை அனுப்பியும் நேரடியாக முறையிட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (202-100)

## கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

கரவெட்டி,டிசெ.28

கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகளுக்கென ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் இந்த நிதியை ஒதுக்கியுள்ளார்.

இந்த நிதியைப் பயன்படுத்தி மாணவரின் கற்றல் நடவடிக்கைகளுக்கெனத் தொலைக்காட்சி, டி.வி.டி.பிளேயர் என்பன கொள்வனவு செய்யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202-70)

## கைதடி மேற்கில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கைதடி மேற்கு பகுதி மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் அண்மையில் கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்தப்பட்டது.

கண்பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட 54 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

பரிசோதனைகளின்போது விழி வெண்படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்ட 10 பேரும் நீரிழிவு நோய் ஏற்பட்ட ஒருவரும் கண்டுபிடிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (202-207)

## நீங்காத நினைவுடன் பத்தாம் ஆண்டில்

மலர்வு 01 ★ 06 ★ 1934



உதிர்வு 18 ★ 12 ★ 1997

**அமரர் நல்லதம்பி வல்லிபுரம்**
B.Sc., M.Sc., Dip.in Ed., SLEAS- II
(இளைப்பாறிய விரிவுரையாளர்)

அன்பான அரவணைப்பும்
கனிவான கண்டிப்பும்
துயரங்களில் ஆறுதலும்
தந்த எம் தந்தையே!
காலங்கள் பல கடந்தாலும்
உங்கள் நினைவிலே நாம்.

108, கலைமகள் வீதி,
கல்வியங்காடு. (69417) மனைவி, மக்கள், மருமகன்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 10 ★ 11 ★ 1924



விண்ணில் 27 ★ 12 ★ 1999

**ஆசிரியமணி அமரர் நமசிவாயம் வாதவூரர்**

திதி: 28.12.2007

எம்மை அரவணைத்து அறிவூட்டி
நன் மக்களாய் பாரில் வாழ வழிகாட்டிய நீங்கள்
விண்ணகம் சென்று ஆண்டுகள் எட்டு ஆயினும்
ஆறாது எம் உள்ளங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவிலங்கை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (69287)
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவு நிகழ்வு அழைப்பும் நன்றி நவிலலும்



**திருமதி வாமதேவன் நடேஸ்வரி**
(மண்டைதீவு)

கடந்த 29.11.2007 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புக்குரிய திருமதி வாமதேவன் நடேஸ்வரி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (29.12.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் தெற்கு,
இணுவில். (69414)
தம்பி குடும்பத்தினரும்
(கண்ணன் சாமியார்),
பேராமக்கள் குடும்பத்தினரும்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சுப்பிரமணியம் கந்தசாமி**
(சிற்ப ஆச்சாரி)

மண்ணுலக வாழ்வில்
31 * 08 * 1941

வானுறையும் தெய்வமாய்
20 * 12 * 2005

திதி: 28.12.2007
பூர்வபக்க பஞ்சமி

பண்பிலே தெய்வமாய்
பாசத்தின் திருவுருவாய்
வாழ்ந்த தெய்வமே!
எம்மோடு இல்லாமல்
எங்குதான் சென்றீர்களோ!

82, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (69329) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொசோவோவின் சுதந்திர பிரகடன முயற்சியை கண்டிக்கும் தீர்மானம் சேர்பிய நாடாளுமன்றில்!

பல்கிரேட், டிச.28

கொசோவோவின் சுதந்திரப் பிரகடன முயற்சிகளைக் கண்டிக்கும் தீர்மானமொன்றை சேர்பிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.




கொசோவோ அதிகாரிகள் அடுத்து வரும் வாரங்களில் சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொள்ளப் போவதாகத் தெரிவிக்கப்படுவதைத் தொடர்ந்தே இந்தக் கண்டிப்புத் தீர்மானத்தை சேர்பியா நேற்றுமுன்தினம் நிறைவேற்றியது.

சுதந்திர கொசோவோவை அங்கீகரிக்கும் எவருக்கு எதிராகவும் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனத் தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கொசோவோவின் எதிர்காலம் குறித்து தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர் அங்கு ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தை அமைக்க அனுமதிக்கக் கூடாதென்றும் நாடாளுமன்றம் கேட்டுள்ளது. நேட்டோஅணியானது கொசோவோ, அல்பேனியர்களை ஆதரிப்பதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சுதந்திர கொசோவோவை அங்கீகரிக்கும் நாடுகளுடனான உறவை சேர்பியா மறுபரிசீலனை செய்யவேண்டும் என்ற வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது.

கொசோவோவின்சுதந்திரத்திற்கு அமெரிக்கா வெளிப்படையாக ஆதரவு வழங்குவதாகவும் பேச்சு மூலமான இணக்கப்பாட்டை எட்டும் முயற்சிகளை தடுத்து வருவதாகவும் சேர்பியப் பிரதமர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்கா சர்வதேச ஒழுங்குமுறையை அழிப்பதற்கு வெளிப்படையாகவே முயல்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொசோவோவின் சுதந்திரத்தை ஏற்றுக் கொண்டால் ஐரோப்பிய ஒன்றியத்தில் தாங்கள் இணையப்போவதில்லை என்று அவர் மேலும் கூறினார்.

## மலேஷியத் தமிழர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### அந்நாட்டு அமைச்சர் உறுதி

கோலாலம்பூர், டிச.28

''மலேஷியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து இந்திய வம்சாவளியினருக்கும், அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்.''

- இவ்வாறு உறுதி தெரிவித்துள்ளார் மலேஷிய பொதுப்பணித் துறை அமைச்சர் சாமிவேலு கூறினார்.

இதுகுறித்து மலேஷியப் பொதுப் பணித் துறை அமைச்சரும், மலேஷிய இந்திய காங்கிரஸ் தலைவருமான சாமிவேலு செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

''இந்திய வம்சாவளியினருக்கு ஏற்படும் எந்தவொரு பிரச்சினைக்கும் சமரசத் தீர்வு காணப்படும். இதற்காக மலேஷியா முழுவதும் ஒவ்வொரு இடமாகச் சுற்றுப் பயணம் செய்து இந்தியர்களுக்கு ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன். ஹிண்ட்ராப் அமைப்பினரால் மலேஷிய இந்திய காங்கிரஸ் மீது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. இவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

''கடந்த நவம்பர் மாதம் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் யார் என் அடையாளம் கண்டுகொண்டுள்ளோம். இவர்களுக்கு தகுந்த ஆலோசனை வழங்கப்படும். அவர்களிடம் பிரச்சினை பற்றி கலந்து ஆலோசிக்கப்படும். பெனாங், குலிம் போன்ற இடங்களில் இதே போன்ற பிரச்சினையை எதிர் கொண்டோம். அவற்றுக்கு சுமுகமாக தீர்வு கண்டுள்ளோம். அதேபோன்று இந்த பிரச்சினைக்கும் தீர்வு காண்போம். ஹிண்டராப் அமைப்பின் கொள்கைகளைப் பின்பற்றுவோர் எங்கெல்லாம் உள்ளனரோ, அங்கெல்லாம் சென்று பிரச்சினைக்குத் தீர்வு காண்போம். அரசு பணிகளில் சேர இந்தியர்களுக்கு ஆர்வம் இல்லை எனத் தவறாகக் கூறப்படுகிறது. சிவில் தொடர்பான பணிக்கு கடந்த ஆண்டு ஆயிரக்கணக்கான இந்தியர்கள் விண்ணப்பித்தனர். அமைச்சரவை கூட்டத்தில் இந்த பிரச்சினையை நான் எழுப்புவேன்.''

இவ்வாறு அமைச்சர் சாமிவேலு கூறினார்.

# தேர்தல் நடத்துவதற்குரிய பாதுகாப்பு வசதி நேபாளத்தில் போதிய அளவில் இல்லை

## தேர்தல் ஆணையம் குற்றச்சாட்டு

காத்மண்ட், டிச.28

நேபாளத்தில் தேர்தல் நடத்துவதற்குப் போதுமான அளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்று தேர்தல் ஆணையம் குற்றஞ்சாட்டியுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் மிக மோசமாக உள்ளன என தலைமைத் தேர்தல் ஆணையர் போஜ்ராஜ் பொக்காரெல் கூறினார்.

நேபாளத்தில் தேர்தல் நடத்துவதற்கு திகதி அறிவிக்கப்பட்டு இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா தேர்தல் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் போஜ்ராஜ் பொக்காரெல் மேலும் கூறியவை வருமாறு:-

''தேர்தல் திகதியைத் தீர்மானிப்பதில் அவசரம் காட்டுவதால் எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை. உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அதன்பிறகு திகதியை அறிவித்தால் மட்டுமே தேர்தலை நேர்மையாகவும் நியாயமாகவும் நடத்த இயலும். இதற்குரிய சட்டபூர்வ நடவடிக்கைகளையும், தொழில்நுட்ப நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். இவற்றை பூர்த்தி செய்தபிறகு தேர்தல் நடத்தலாம் என்று அறிவித்தால் 90 தினங்களில் தேர்தல் நடத்த முடியும்.

''நாட்டின் பல பகுதிகளில் பாதுகாப்பு நிலைமை மிக மோசமாக உள்ளது. தற்போதைய சூழலில் பாதுகாப்பை வலுப்படுத்துவதே பிரதான பணியாகும்.'' - என்று போஜ்ராஜ் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேபாளத்தின் ஏழு கட்சி கூட்டணி இடையே தற்போது ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது. இக் கூட்டணியினர் அடுத்த ஆண்டு ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் தேர்தல் நடத்தவேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்த சட்ட மசோதா எதிர்வரும் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. இதை ஏற்று மாவோயிஸ்ட்டுப் போராளிகளும் தேர்தலில் போட்டியிட சம்மதித்துள்ளனர். ஏழுகட்சிக் கூட்டணியில் மாவோயிஸ்ட்டு இயக்கத்தினரும் இடம்பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**உலக அரங்கில்**

# இருண்ட யுகத்தில் பாகிஸ்தான்

## முன்னாள் தலைமை நீதிபதி சௌத்ரி தெரிவிப்பு

இஸ்லாமாபாத், டிச.28

பாகிஸ்தான் தற்போது இருண்ட யுகத்தில் பயணித்துக்கொண்டிருக்கின்றது என்று பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி இப்திகார் முகம்மது சௌத்ரி கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் நெருக்கடி நிலை அமுல்படுத்த உத்தரவிடுமாறு ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் வற்புறுத்தியபோது அதற்கு சௌத்ரி ஒப்புதல் அளிக்கவில்லை. இதைத் தொடர்ந்தே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். தற்போது வீட்டுக் காவலில் சிறை வைக்கப்பட்டுள்ள சௌத்ரி, பக்ரீத் பண்டிகையின்போது தொழுகைக்கு பள்ளிவாசல் செல்லவும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பாகிஸ்தானின் தற்போதைய நிலை குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையை பிரபல வழக்கறிஞர் அத்தார் மினாலா வெளியிட்டார். அதில் சௌத்ரி கூறியிருப்பவை வருமாறு:-

பாகிஸ்தான் உருவாகக் காரணமாக இருந்த முகம்மது அலி ஜின்னாவின் கொள்கைகளும் தீர்க்க தரிசனமும் தற்போதைய ஆட்சியாளர்களிடம் இல்லை. தற்போது பாகிஸ்தானில் வசிப்பவர்களிடையே அச்சமான சூழல் நிலவுகிறது.

பாகிஸ்தானில் சுதந்திரமான சட்ட அமைப்பு செயற்பட வேண்டும் என ஜின்னா கனவு கண்டார். இதன் மூலம் அனைத்து மதத்தினரின் அடிப்படை உரிமைகளும் காக்க முடியும் என்று உறுதியாக நம்பினார். ஆனால், இவைகளில் எதுவும் பாகிஸ்தானில் சாத்தியமில்லை என்ற சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஜின்னாவின் கனவுகளை தொலைநோக்குப் பார்வையை சாத்தியமாக்க வேண்டும் என்பதற்காகவே பாகிஸ்தானில் இருந்து மக்களுடன் மக்களாகப் போராட வேண்டியுள்ளது. சட்டம் ஒன்றே பாகிஸ்தானை ஆள வேண்டும். ஒரு தனிநபர் ஆள்வதை அனுமதிக்க முடியாது.

பாகிஸ்தானில் வாழும் குடிமக்களின் நலன் அவர் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் காக்கப்பட வேண்டும். அவர்களது மத நம்பிக்கைகள் காக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களது இறை.கடமைகளை நிறைவேற்ற எவ்வித குறுக்கீடும் இருக்கக் கூடாது.

பிற சமூகத்தினரின் மத நம்பிக்கை, உயிர், கலாசாரம் உள்ளிட்டவை காக்கப்பட வேண்டும். அவர்கள் அனைவரும் பாகிஸ்தானின் பிரஜைகள் என்ற வகையில் அவர்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு சௌத்ரி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# அதிநவீன வான்வெளிப் பாதுகாப்பு சாதனங்களை ஈரானுக்கு வழங்குகின்றது ரஷ்யா

## எதிர்க்கிறது அமெரிக்கா



மொஸ்கோ, டிச.28

ஈரானுக்கு அதிநவீன வான்வெளிப் பாதுகாப்பு சாதனங்களை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது. அதேவேளை, அமெரிக்கா இது குறித்து கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

ஈரானுக்கு புதிய வான்வெளி பாதுகாப்பு சாதனங்களை ரஷ்யா வழங்கவுள்ளது எனத் தெரிவித்துள்ள ஈரானின் பாதுகாப்பு அமைச்சர், விமானங்கள், ஏவுகணைகள் போன்றவற்றைச் சுட்டு வீழ்த்தக்கூடிய எஸ் - 300 விமான எதிர்ப்புப் பாதுகாப்புச் சாதனமே ரஷ்யாவினால் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எஸ் - 300 விமான எதிர்ப்புப் பாதுகாப்புச் சாதனமானது 90 மைல் வேகத்தில் 90,000 அடிக்குச் செல்லக்கூடியது. அமெரிக்காவின் 'பட்ரியட்' எனும் விமான எதிர்ப்பு ஆயுதத்தை விட இதுநவீனமானது.

ரஷ்யா 2007இல் ஈரானிற்கு வழங்கிய ஏவுகணையை விட இது நவீனமானது. ரஷ்யாவுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே குறிப்பிட்ட ஏவுகணை வழங்கப்படுவதாக ஈரான் தெரிவித்துள்ளது.

எனினும், ரஷ்யா எத்தனை ஏவுகணைகளை வழங்கும் என்பதை தெரிவிக்கவில்லை.

ரஷ்யா இது குறித்து கருத்துத் தெரிவிக்கவில்லை. கடந்தகாலங்களில் ரஷ்யா இவ்வாறான தகவல்களை நிராகரித்து வந்துள்ளது. இதேவேளை இது குறித்து வெள்ளை மாளிகை கவலை வெளியிட்டுள்ளது.

ஈரானிற்கும், ஏனைய நாடுகளுக்கும் இவ்வாறான ஆயுதங்கள் விற்பனை செய்யப்படுவது குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# பெண்களே வாக்களிக்காத கிராமம்

இஸ்லாமாபாத், டிச.28

பாகிஸ்தான் உருவாகி 60 ஆண்டுகள் ஆகியும் பெண்கள் இதுவரை தேர்தலில் வாக்களிக்காத கிராமம் ஒன்று அந்நாட்டில் உள்ளது என்றால் ஆச்சரியம்தான். பஞ்சாப் மாகாணம் மோரிப்பூ கிராமம்தான் அது. இக் கிராமத்தில் சுமார் 7 ஆயிரம் பெண் வாக்காளர்கள் உள்ளனர். எனினும், இவர்கள் எவரும் எந்தத் தேர்தலிலும் வாக்களிக்கவில்லை.

'எங்களது கிராமத்துப் பெண்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு எங்களின் முன்னோர்கள் தடைவிதித்துள்ளனர். அவர்களது முடிவை நாங்கள் ஏற்று நடக்கிறோம்.' - என்று அந்த கிராம வழக்கறிஞர் குலாம் முஸ்தபா ஆலக் இதற்கு விளக்கம் தருகிறார்.

பெண்களை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்று அந்தக் கிராமத்து ஆண்களை பல ஆண்டுகளாக தொண்டு நிறுவனங்கள் கேட்டுக்கொண்டுவருகின்றன. எனினும் அதற்கு பலன் கிட்டவில்லை. அந்த கிராமத்தில் ஒவ்வொரு முறையும் தேர்தல் நடைபெறும்போது ஆண்களுக்கு இரு வாக்குச் சாவடிகளையும் பெண்களுக்கு இரு வாக்குச் சாவடிகளையும் தேர்தல் ஆணையம் அமைக்கும். எனினும், எந்த பயனுமில்லையாம்.

# பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் இருவர் ஆப்கானிலிருந்து வெளியேற்றம்

காபூல், டிச28

தலிபான் தீவிரவாதிகளுடன் பேச்சு மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஆப்கானிஸ்தான் அரசு ஐரோப்பிய மூத்த இராஜதந்திரிகள் இருவரை நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளது. ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரிகள் இருவர் தலிபானின் உள்ளூர் தலைவர்களுடன் பேச்சு மேற்கொண்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதுடன் நாட்டைவிட்டு வெளியேறுமாறும் கேட்கப்பட்டனர்.

இவ்விரு இராஜ தந்திரிகளும் வியாழக்கிழமை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்மை விமர்சிப்போருக்கு விடுதலைப் புலிகளின் ஆதரவாளரெனப் பட்டம் சூட்டும் அரச தரப்பு!

*நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் மறக்கடிக்க வைக்கும்- அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துப் பேணிக் கொள்ளும் - நடைமுறைப் போக்கிலேயே இன்றைய அரசு மற்றும் அரசுக்குச் சார்பான தரப்புக்கள் செயற்படுகின்றன.*

*தமது அந்தக் குறிக்கோள் நிறைவேற்றப்படுவதற்கு, தம்மைத் தவிர்ந்த ஏனைய அனைத்துத் தரப்புக்களும் 'புலி ஆதரவுத் தரப்புக்களே' என்ற ஆயுதம் அரச தரப்பினரால் மிகச் சாதுரியமாகப் பயன்படுத்தப்பட்டு நாட்டின் எதிர்காலம் காவு கொள்ளப்படுகிறது என்பதை விளங்குகிறது இக்கட்டுரை.*

*சுதந்திரஊடக இயக்கத்தின் அமைப்பாளர் சுனந்ததேசப் பிரிய இக்கட்டுரையை எழுதியுள்ளார்.*

பிரமுகர் குணதாஸ அமரசேகரவும் எல்லே குணவன்ஸ தேரரும் மிக அண்மைக் காலம் வரையிலும் ஜே.வி.பி. கட்சியின் வெகுஜன அமைப்பொன்றான நாட்டுப்பற்றாளர் மக்கள் இயக்கத்தின் பலம் பொருந்திய இரு தூண்களாகவே விளங்கினர். ஆனால், அவ்விருவரதும் சிந்தனைப் போக்கிற்கு அமைய ஜே.வி.பி.யினர் தற்போது விடுதலைப் புலிகளுக்கு வரவேற்பு வழங்கும் இனத் துரோகிகளேயாவர். அவர்கள் அவ்வாறு முத்திரை குத்தப்படுவதற்குக் காரணம் அரசின் வரவு-செலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பின்போது அதற்கு எதிராக ஜே.வி.பி.யினர் வாக்களித்தமையே ஆகும். அரசினால் முறைகேடாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதும்-மக்களுக்குச் சேவையாற்றுவதையே தமது கடப்பாடாகக் கைக்கொள்ள வேண்டியவைகளுமான, அரச-பொதுசன ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட குணதாஸ அமரசேகரவும் எல்லே குணவன்ஸ தேரரும் கடந்த சில நாள்களாக அரசின் வரவு-செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்த அனைத்துத் தரப்புக்கள் மீதும் விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோர் என முத்திரை குத்தியிருந்தனர்.

அது எவ்வாறான போதிலும், இன்று நாட்டில் முன்னெடுத்துச் செல்லப்படும் மஹிந்த ராஜபக்ஷ - குடும்ப நிர்வாகம், அரசின் நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை மற்றும் நாட்டின் பொருளாதார ஈட்டல் செயற்பாடுகள் நாளுக்கு நாள் சீர்கெட்டுக் கீழிறங்கிச் செல்வதால் உருவாகிவரும் பொருளாதாரச் சிரமநிலை போன்ற மேலும் பல சீர்கேடுகளே ஜே.வி.பி.யினர், அரசின் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கக் காரணமென ஜே.வி.பி.யினரால் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

**சுனந்த தேசப்பிரிய**

மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஆலோசகர்களாகப் பெரும் பணியாற்றி வரும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் ஓர் அங்கமான, வெகுஜன அமைப்பொன்றின் பயங்கரவாதத்துக்கு எதிரான பிரிவு, பத்திரிகைகள் ஊடாக அறிக்கையொன்றை வெளியிட்டும் சுவரொட்டிகளை ஒட்டியும், தாம் ஏன் வரவு-செலவுத்திட்டத்துக்கு எதி ராக வாக்களிக்க நேர்ந்தது என்ற ஜே.வி.பி. யினரின் மேற்குறிப்பிட்ட நியாயவாதத்துக்குப் பதில் வழங்கியிருந்தது.

அதாவது இரண்டாம் உலக யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் இந்நாட்டு மக்கள் கம்பு-கேழ்வரகு என்பவற்றை உண்டு உயிர்வாழ முடிந்திருக்குமானால், ஏன் இன்று நாட்டுக்காகச் சிறிது பட்டினி கிடந்து சிரமப்படக்கூடாது? என அது வினாத் தொடுத்திருந்தது. இக் கூற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, உண்மையில் ஜே.வி.பி. கூட இதே கதையைத்தான் கூறி வந்துள்ளது. அதாவது யுத்தத்தில் வெற்றியீட்ட வேண்டுமானால் எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்கு நாடு தயாராக இருக்க வேண்டியுள்ளது என்பதே அதன் வாத மாக அமைந்திருந்தது. அந்த வகையில், அமரசேகர மற்றும்-எல்லே குணவன்ஸ தேரர் ஆகிய இருவரும் இன்னமும் அதையை கூறி வருகின்றனர்.

1988-1990 காலகட்டத்தில் ஜே.வி.பி. இளைஞர்களுக்குப் பைத்தியம் பிடித்திருந்தது எனவும் அவ்வாறு பைத்தியம் பிடித்த விசர் நாய்களைக் கொல்வதைத் தவிர வேறு மார்க்க மெதுவும் இல்லையெனவும் கடந்த 2000 ஆம் ஆண்டில் டீ.என்.எல். தொலைக்காட்சிச் சேவை விவாதமொன்றில் பங்கேற்ற குணதாஸ அமரசேகர கருத்து வழங்கியிருந்தார். அவரது அந்தக் கூற்றைப் புதுப்பித்து, ஜே.வி.பி.க்குப் பதிலாக, விடுதலைப் புலிகள் அமைப்பை அங்கு நிறுத்தி, விமல் வீரவன்ஸ இன்று அதே நியாயத்தைக் கூறி வருகிறார். குணதாஸ அமரசேகரவின் அந்த நியாய வாதத்துக்கு அமைய, அன்று பல ஆயிரக்கணக்கான ஜே.வி.பி. உறுப்பினர்கள் கொன்று குவிக்கப்படுவதற்குத் தலைமை தாங்கிச் செயற்பட்ட இந்நாட்டின் இராணுவத் தளபதிகள் இன்று விமல் வீரவன்ஸவின் பார்வையில் வீரபுருஷர்களாகி விட்டுள்ளனர்.

யுத்தத்தை அல்லது மஹிந்த ராஜபக்ஷவின் அரசை விமர்சிக்கும் ஏனைய அனைத்துத் தரப்பினரும் புலி உளவாளிகளே என அடையாளப்படுத்தும் கைங்கரியத்தை நாடளாவிய ரீதியில் அரங்கேற்றி வந்ததும் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட ஜே.வி.பி.தரப்பின் பேச்சாளர்களேயாவார். வேடிக்கை என்னவெனில், இன்று அதே தர்க்கவாதமும் ஜே.வி.பி.க்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதாகும்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசிலிருந்து விலகிச் சென்றதை அடுத்து, அடுத்த நிமிடமே மங்கள சமரவீர-ஸ்ரீபதி சூரியாரச்சி இருவருமே புலிகளின் ஆதரவாளர்களென அடையாளப்படுத்தப்பட்டனர். ஆனால், அதற்கு எந்தவொரு அத்தாட்சியும் இருக்கவில்லை. அவர்கள் அரசை விரோதித்துக் கொண்டது மட்டுமே அவர்கள் மீது அவ்வாறு பழி சுமத்தக் காரணமாகிறது. அவர்கள் யுத்தத்திற்கு எதிராகச் செயற்பட்டதில்லை. ஆனாலும், இவ்விருவரும் அரசிலிருந்து வெளியேறுவதற்கு முன்னரான காலகட்டத்தில் ஏனைய தரப்பினர் மீது விடுதலைப்புலிகள் என முத்திரை குத்தும் கைங்கரியத்தில் முன்னின்று செயற்பட்டவர்கள் ஆவர். இறுதியில் மங்கள-ஸ்ரீபதி இருவர் மீதும் புலி முத்திரை குத்தப்பட்டது.

தற்போது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, அரசிலிருந்து வெளியேற மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைய, அக்கட்சியின் தலைவரான ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட தரப்பினரும் விடுதலைப் புலி ஆதரவாளர்களென்று அடையாளப்படுத்தப்படுவது நிச்சயமே.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாகக் கருத்து வெளியிடும் - முன்னின்று செயற்படும் - அனைத்துத் தரப்புக்கள் மீதும் - அவர்கள் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களேயென அடையாளப்படுத்தும் கைங்கரியத்தை அரசும் ஜே.வி.பியும் இணைந்தே மேற்கொண்டன. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விரோதமான தரப்புக்களை உருவாக்குவதற்கும் புலி முத்திரையே ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

ஆனால், இந்நாட்டில் செயற்படும் எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனமும் அத்தகைய பாங்கில் செயற்படுகிறது என்பதை நிரூபித்துக் காட்டவென - அது தொடர்பாக நிறுவப்பட்ட - அரச நிறுவனங்களின் சீர்கேடுகளைக் கண்டறியும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் இன்று வரையில் அக்குற்றச்சாட்டை நிரூபிக்க இயலாது போயுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற நுகேகொட குண்டுவெடிப்பின் போது, சம்பவ இடத்தில் அச்சம்பவத்தைப் படம்பிடித்து அதனை 'சிரச' தொலைக்காட்சிச் சேவை க்கு வழங்கிய சுகந்திரமாக இயங்கும் ஊடகவியலாளரொருவரைக் கூட விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதிநிதியென ஜே.வி.பி சார்பு "லங்கா" செய்திப் பத்திரிகை அடையாளப்படுத்தி இருந்தது.

எவ்வாறான போதிலும், கடந்த 1981 ஆம் ஆண்டிலிருந்தே தமிழ் மக்களது ஆயுதப் போராட்டத்துக்கு எதிராக இலங்கை அரசு யுத்தம் புரிந்து வருகிறது. ஆனாலும், அரசுத்தரப்புக் கருத்துக்களுக்கு விரோதமாகச் செயற்படுவன எனக் கருதப்படும் அனைத்துத் தரப்புக்கள் மீதும் புலி முத்திரை குத்தும் கலாசாரம் இந்தளவுக்கு அபாயகரமாக உச்சம் பெற்றுள்ளது மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தின் கீழேயே ஆகும். இந்த நடைமுறைப் போக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கோ அல்லது ஜே.வி.பிக்கோ சொந்தமானதல்ல; நெறிப்படுத்தலும் அல்ல.

அது, அந்த அரசால் தலையில் தூக்கி வைக்கப்பட்டுள்ள பிரபலஸ்தரான சம்பிக்க ரணவக்க என்ற பிரமுகரின் கைச்சரக்கே ஆகும். உண்மையில் அது அவரது கைச்சரக்குத்தான் [illegible] தெரிந்து கொள்ள [illegible] அவ் பிரமுகரால் எழுதி வெளியிடப்பட்ட "விடுதலைப்புலிகள் குறித்த கண்ணோட்டம்" என்ற நூலை வாசித்துத் தெரிந்து கொள்ளலாம். பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய அமைப்பின் பிரதிநிதியென்ற வகையிலேயே அவரால் அந்நூல் எழுதப்பட்டது.

சம்பிக்க ரணவக்கவின் மேற்படி நூலுக்கு அமைய, இந்நாட்டில் இரு தரப்புகள் மட்டுமே உள்ளன. ஒன்று, விடுதலைப்புலிகளுக்கு எதிரான தரப்பு. மற்றது, அவர்களுக்கு ஆதரவளிக்கும் தரப்பு. சுருக்கமாகக் கூறுவதானால், கறுப்பு - வெள்ளையைத் தெளிவாகக் காட்டுமொரு சித்திரமாகவே அவரது அந்நூலைக் குறிப்பிட முடியும். அவரது அந்தக் கருத்துக்கு-சித்திரத்துக்கு அமைய டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் போன்ற அனைத்துத் தமிழ் தரப்பினரும் திரைமறைவில் மறைந்திருக்கும் புலிகளே ஆவர். உதாரணமாக டக்ளஸ் தேவானந்தா பற்றி சம்பிக்கரணவக்க அவரது நூலில் ஈ.பி.டி.பி அமைப்பு முற்று முழுதான ஐ.தே.கட்சியின் உருவாக்கமொன்றேயாகும். இன்று பொதுமக்களின் நிதியிலிருந்து அவருக்குச் சம்பளம் வழங்கப்படுகிறது எனவும் குறிப்பட்டுள்ளார்.(பக்கம் 28)

அடுத்ததாக, படுகொலையுண்ட நாடாளுமன்ற உறுப்பினரொருவரான ஜோசப் பரராஜசிங்கம் பற்றி அவர் தமது நூலில் ஜோசப் பரராஜசிங்கம் போன்ற சேற்று நிறம் கொண்ட புலிகள் அழித்தொழிக்கப்படுவது அவசியமானதே எனவும் குறிப்பிட்டுள்ளார். (பக்கம் 89)

சம்பிக்க ரணவக்கவின் அந்த நூலின் கூற்றுக்கு அமைய, ஜே.வி.பி கட்சியும் கூட, விடுதலைப்புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமொரு அரசியல் சக்தியேயாகும். அத்தோடு, இலங்கை சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் கூட அழித்தொழிக்கப்பட வேண்டிய புலி ஆதரவுச் சக்திகளே எனவும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

வகை தொகையின்றி தமிழ் மக்கள் கைது செய்யப்படல், முஸ்லிம் அரசியல் கட்சிகளைப் பிளவுபடுத்தி அவற்றை நலிவுபடுத்தி விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் உள்ளிட்ட இன்று இடம்பெறும் பெருமளவு கைங்கரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்களே எனவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சம்பிக்கரணவக்கவின் அந்த நூலின் வாதத்துக்கு அமைய, ஐ.நா. அமைப்பும் கூட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குமொரு சக்தியேயாகிறது. அந்த வகையில் யுனிசெவ், யுனெஸ்கோ, யூ.என்.டி.பி ஆகிய அனைத்து ஐ.நா அமைப்புக்களும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குகின்றன. ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதி நிதியான 'அலன் றொக்' முதற் கொண்டு மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா அமைப்பின் விஷேட பிரதிநிதி "லூலிஸ் ஆர்பர் அம்மையார்" வரை விடுதலைப்புலிகள் அமைப்புக்கு மறைமுகமாக உதவி வழங்குவோரே.

இன்று, அரசின் போராட்டப் பயணத் தின் முக்கிய கோட்பாடு, "எம்மைத் தவிர்ந்த ஏனைய அனைத்துத் தரப்பினரும் புலிகளே" என்பதாகும். தமிழர் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில்செயற்படும் ஆயுதப் போராட்ட அமைப்புகளுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தம், இலங்கையின் அரசியல் நிலைப்பாட்டைத் தீர்மானிக்குமொரு முக்கிய காரணியாக கருதப்பட்ட போதிலும், இலங்கை யின் அரசியல் நிலைப்பாட்டைத் தீர்மானிக்கும் ஒரே காரணி அதுவல்ல. பொருளாதாரம் மற்றும் கலாச்சாரக் கட்டமைப்பும் கூட இந்நாட்டின் அரசியல் போக்குத் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ள அடிப்படையாய் அமையும் காரணிகளாகும். ஆனால், இன்றைய அரசியலை நிலை நிறுத்திக் கொள்வதற்காக அவை அனைத்தும் மறக்கடிக்கப்பட்டு எதிர்காலம் இருள்மயமாக்கப்படுகிறது என்பதே உண்மை ஆகும்.

## ஹெல உறுமய அமைச்சரின் கண்டுபிடிப்பும் கூட இதுவே

**தமிழில்-சரா**

# வாசகர் திருமுகம்

## எங்கள் பிரிவுக்கு மட்டும் ஏன் வீட்டுத்திட்டம் இல்லை!

ஆவரங்கால் மேற்கு J/277 பிரிவானது 06 சனசமூக நிலையங்களை உள்ள டக்கிய பிரிவாகும். இதுவரையில் ஒரு குடும்பத்திற்கேனும் இப் பிரிவில் வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை.

யாழ்.குடாநாட்டின் ஏனைய பிரிவுகளில் பல்வேறு நிறுவனங்களால் வீட்டுத்திட்டம் வழங்கி முடிவுற்றும், முடிவுறும் தறுவாயிலும் இருக்கின்றன. ஆனால் எமது கிராமத்தில் இதற்கான முன்முயற்சிகள் கூட எடுக்கப்படாமலிருப்பது மிகவும் விந்தையாக இருக்கிறது. இந்த மக்கள் செய்த பாவம் என்ன? எவர் இட்ட சாபம்.

தங்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லையே என மனம் வெந்து வெதும்பி நெஞ்சு குமுறி வேதனைப்படுகிறார்கள் இந்த மக்கள். பலர் சனசமூக நிலை யங்களின் நிர்வாகத்தை குறை கூறி முரண்பட்டும் கொள்கிறார்கள்.

எங்கே தவறு விடப்பட்டிருக்கிறது?

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தை தங்களின் மேலான கவனத்தில் எடுத்து 2008 ஆம் ஆண்டு முற்பகுதியிலாவது இந்த மக்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்க ஆவன செய்வார்கள் என மனதார நம்புகின்றோம்.

*ஆவரங்கால்.* ச.க.சுஜந்தன்.

## இளவாலைக்கான இ.போ.ச.பேருந்து சேவை

மேற்படி விடயம் தொடர்பாக தங்களது உதயன் பத்திரிகையில் 2007.10.03 ஆம் திகதி 05 ஆம் பக்கத்தில் வாசகர் திருமுகத்தில் வெளியான விடயம் சம்பந்தமாக பின்வருவனவற்றை அறியத் தருகின்றேன்.

மேற்படி செய்தியின் பிரகாரம் யாழ்சாலை முகாமையாளரிடம் அறிக்கை கோரிய போது பாதை இல.788இல் தற்போது நாளொன்றுக்கு காலை, மாலை பாடசாலை சேவைகள் தினமும் ஒழுங்காக செயலாற்றப்படுவதோடு மேலும் நான்கு (04) சேவைகள் செயலாற்றப்படுவதாகவும், இளவாலையிலிருந்து பாதை இல.764 ஊடாக தினமும் காலை ஒரு சேவையும் மாலை ஒரு சேவையும் செயலாற்றப்படுகின்றது எனத் தெரியப்படுத்தியுள்ளனர்.

ஆனால் ஏ-09 பாதை தடைப்பட்டதன் பின் எமக்கு தேவையான ரயர், ஒயில், உதிரிப்பாகங்கள் என்பன போதியளவு கிடைக்கப்பெறாமையால் முழுமையான சேவைகள் செயலாற்ற முடியாமல் தடைப்பட்டதற்கு மனம் வருந்துகின்றோம். இரு மாதங்களுக்கு முன்பு கப்பல் மூலம் ஓரளவு ரயர், உதிர்ப்பாகங்கள், ஒயில் என்பன கிடைத்ததின் பின் நான்கு சேவைகளை நடத்த முடிந்துள்ளது என்பதை தங்களுக்கு அறியத் தருகின்றேன். தயவுசெய்து இதை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கவும்.

செ.கமலநாதன்,
*செயலாற்று முகாமையாளர்,*
*இ.போ.ச. (வடக்கு)- 26.11.2007*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மகிந்தரின் பெருமிதம்

தென்னிலங்கையில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமது அரசு அண்மைக் காலத்தில் களமுனைகளில் இராணுவ ரீதியாகவும் சர்வதேச மட்டத்தில் இராஜதந்திர ரீதியாகவும் பெரு வெற்றிகளை ஈட்டியிருப்பதாகத் தெரிவித்துப் பெருமிதம் கொண்டிருக்கின்றார்.

கிழக்கில் நிலப்பரப்புகளை விடுதலைப் புலிகள் வசம் இருந்து மீட்டமையையும், சர்வதேச மட்டத்தில் தமது யுத்த வரவு - செலவுத்திட்டத்துக்கு பெருமளவு நிதியைப் பெற்றுக்கொண்டமையையும் இத்தகைய பெரும் சாதனையாக அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

முன்னைய அரசுகளால் ஒரு வருடத்துக்கு ஆகக் கூடியது எண்பது கோடி அமெரிக்க டொலர்களையே நிதி உதவியாகப் பெற முடிந்தது என்றும், ஆனால் தமது அரசு ஒரு வருடத்தில் நூற்றியிருபது கோடி அமெரிக்க டொலரை (சுமார் பதின் மூவாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாவை) உதவியாகப் பெற முடிந்திருக்கின்றது என்றும் அவர் பீற்றியிருக்கின்றார்.

வழமையாக இலங்கைக்கு உதவிவரும் ஜப்பானும் மற்றும் மஹிந்தரின் அரசின் புதிய நட்பு அணிகளான சீனாவும், பாகிஸ்தானும், ஈரானும் சேர்ந்து - மஹிந்தர் அரசின் போர் வெறிப் போக்கையும் மிக மோசமான மனித உரிமை மீறல் செயற்பாடுகளையும் கண்டுகொள்ளாமல் ஒதுக்கியபடி - கண்ணை மூடிக்கொண்டு உதவ முன்வந்தமையைத் தமது அரசுக்கு சர்வதேச மட்டத்தில் கிடைத்த பெரு வெற்றிகளாகக் கருதி நீட்டோலை படிக்கின்றார் ஜனாதிபதி மஹிந்தர்.

இவ்வாறு தமது போர் முனைப்புப் போக்குக்கு உந்துதல் அளிக்கும் வகையில் இந்த நாடுகளில் இருந்து தமது அரசுக்கு பெருவாரியாக உதவி கிடைப்பதை தனது அரசுக்கான சர்வதேச ஆதரவாகவும் அவர் அர்த்தப்படுத்துகிறார். இந்த நிதி உதவியை சான்றாக முன்னிறுத்தி, தமது அரசுக்கு சர்வதேச ஆதரவு இல்லை என்போரை எள்ளி நகையாடவும் அவர் தவறவில்லை.

தமது அரசின் கொடூரப் போர்முனைப்புப் போக்குக்கும், அமைதி முயற்சிகளை சீரழித்து, நிரந்தர சமாதானத்துக்கான வாய்ப்புகளை நிர்மூலமாக்கி, இனச்சிக்கலை மேலும் மோசமாக்கும் எத்தனத்துக்கும், பாரதூரமான மனித உரிமை மீறல் அராஜகத்துக்கும் எதிராக சர்வதேச சமூகம் - குறிப்பாக மேற்குலகம் - ஒன்று திரண்டு வருகின்ற யதார்த்தத்தை மறந்து, தமது அரசுக்கு சர்வதேச ஆதரவு அதிகரித்திருப்பதாக அவர் அர்த்தம் பண்ணுகின்றார். முன்னைய அரசுகளுக்கு இல்லாத சர்வதேச ஒத்துழைப்பும் வரவேற்பும் தமது தற்போதைய அரசுக்குக் கிட்டியிருப்பதாக அவர் புளகாங்கிதம் அடைகிறார்.

ஜப்பான் மற்றும் சீனா, பாகிஸ்தான், ஈரான் போன்றவை இலங்கை அரசின் போரியல் தீவிரத்துக்கு எண்ணெய் வார்க்க முன்வந்திருப்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் மஹிந்தரின் அரசின் இந்தச் செயற்போக்குக்குஎதிராக மேற்குலகம் முறுகி வருகையில், அதை மூடி மறைத்து, அதன் விபரீத விளைவுகளைப் பற்றியே சிந்திக்காமல், சர்வதேச மட்டத்தில் தமது அரசு படைத்துள்ள சாதனைகள் ஒப்புயர்வற்றவை என்று அரசுத் தலைவர் தமது அரசுக்குத் தாமே முடி சூடிக்கொள்வது எள்ளளவும் பொருத்தமற்றது.

மேற்குலக நாடுகள் இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை 'பயங்கரவாதமாக' அர்த்தம் பண்ணி, பல தடைகளை விதித்து, நெருக்குவாரங்களைக் கொடுத்து, கட்டுப்பாடுகளைப் போட்டு, புலிகளை இறுக்கி வந்தன என்பதும் உண்மைதான். ஆனால் அந்த இறுக்கமான செயற்போக்கை அவை மஹிந்தரின் அரசுப் பக்கமும் மெல்லத் திருப்பத் தொடங்கிவிட்டன என்பது மறுக்கமுடியாத உண்மை. இலங்கை ஓர் அங்கீகரிக்கப்பட்ட இறைமையுள்ள சக நாடு என்பதும், மஹிந்தரின் நிர்வாகம் அந்த நாட்டின் சட்டபூர்வ அரசு என்ற அந்தஸ்துடையது என்பதும் இலங்கை தொடர்பான மேற்கு நாடுகளின் செயற்பாடுகள் வெளிப்படையாக அமையாமல் இருப்பதற்கான காரணங்களாக இருக்கலாம். ஆனால் அதைத் தமக்குச் சாதகமாகக் கருதிக்கொண்டு - சர்வதேச மட்டத்தில் தமது அரசுக்கு எதிராகத் திரண்டுவரும் அழுத்தமான கருத்தியல் நிலைப்பாட்டை மூடிமறைத்துக் கொண்டு - தமது போரியல் போக்குக்கு ஒரு சில நாடுகளில் இருந்து கிடைக்கும் உதவிகளை மட்டும் முன்னிறுத்தி - இராஜதந்திர சாதனைகளைப் படைத்து விட்டமைபோல அரசுத் தலைவர் மகிழ்வதில் அர்த்தமில்லை.

அவரது அரசின் யுத்த சந்நதம் தொடர்பாக மேற்குலகு கொண்டுள்ள அதிருப்தியும், விசனமும், எரிச்சலும் இராஜதந்திரத் தொடர்பாடல்களில் மென்மையான கண்டனங்களைத் தாண்டி, செயல் வடிவ நடவடிக்கைகளாக மாறும் போதுதான் அவற்றின் ஆழத்தை அரசுத் தலைவர் புரிந்து கொள்வார் போலும்.

அது போன்றதுதான் இராணுவ ரீதியான வெற்றிகளும். ''ஈழப்போர் இப்போது நான்காவது கட்டத்தை எட்டிவிட்டது.'' இவற்றுக்கு மத்தியில் இராணுவ வலுச் சமநிலை என்ற ஊஞ்சல் மாறி, மாறி அசைந்ததை யாரும் மறந்துவிட முடியாது.

புலிகளின் பலம் மிக்க யாழ். குடாநாட்டுக் கோட்டையை அவர்களிடமிருந்து கைப்பற்றி, அவர்களை வன்னிக்குத் துரத்தியடித்து, 'ஜெயசிக்குறு' படை நடவடிக்கை மூலம் வன்னியையும் கிழக்கு, மேற்காக துண்டுபடுத்தும் பெரும் இராணுவ நகர்வை பெரும்பாலும் பூர்த்தியடையும் அளவுக்கு முன்னெடுத்த நிலையில்தான் ''புலிகளில் தொண்ணூற்று ஆறு வீதமானோரை அழித்துவிட்டோம். எஞ்சிய நான்கு வீதமானோரையும் விரைவில் பூண்டோடு அழிப்போம்!'' - எனச் சூளுரைத்தார் அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை. ஆனால் அதன் பின்னர்தான் 'ஜெயசிக்குறு' நிர்மூலமாகி, ஆனையிறவு கூட்டுப் படைத்தளம் தகர்ந்து, 'அக்னிகோள' எத்தனம் புஸ்வாணமாகி, இராணுவ வலுச்சமநிலை ஊசல் புலிகள் பக்கம் சாய்ந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது தமது அரசினதும் படைகளினதும் இராணுவ வெற்றிகள் என மார்தட்டும் சாதனைகள் கூட இத்தகைய ரகத்துக்குள் அமைந்தவைதான். அரசுப் படைகள் இப்போது முழுமையாக விடுவித்த கிழக்கின் வெற்றிகூட, இப்படிப் பல தடவைகள் கைமாறியதும் உண்டு.

எனவே, சர்வதேச ரீதியிலும், களமுனை யுத்தத்திலும் தாம் ஈட்டியுள்ள சாதனைகள் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெருமிதம் கொள்ளும் பெறுபேறுகள் அவரது தரப்புக்கு சாசுவதமானவையாக என்பதும் அவரது பக்கத்திலேயே நின்று நிலைத்திருக்குமா என்பதும் கேள்விக்குறியே. அதற்குக் காலம்தான் பதில் கூறவேண்டும்.

# புலிகள் கூறுவதையெல்லாம் அப்படியே ஏற்று தலையசைக்கின்றன ஐ.நா. அமைப்புக்கள்!

## 'தமிழர் தாயகம்', 'ஸ்ரீலங்காவின் தாக்குதல்' சொற்பதங்களால் அரசு சீற்றம்

கொழும்பு,டிசெ.28

கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளைச் சந்திக்கும் ஐ.நா. அமைப்புகளின் பிரதிநிதிகள் அங்கு புலிகள் கூறுவதையெல்லாம் அப்படியே ஏற்று தலையசைத்துவிட்டு வருகின்றனர் என்று சீற்றத்துடன் கூறியிருக்கின்றார் அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ரஜீவ விஜய சிங்க.

'தமிழர் தாயகப் பகுதிகள்', 'ஸ்ரீலங்காவின் கிளைமோர்த் தாக்குதல்கள்' போன்ற சொற்பிரயோகங்களை விடுதலைப் புலிகள் முன்வைக்கும்போது அதனை ஆட்சேபித்து ஒரு வார்த்தையேனும் ஐ.நா. பிரதிநிதிகள் கூறுவதில்லை என்று அவர் கண்டித்துள்ளார்.

இதுதொடர்பாக அரச சமாதான செயலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தமிழர் தாயகப் பகுதிகளில் ஐக்கிய நாடுகளின் பணிகள் குறித்தும், விடுதலைப் புலிகளின் படையணிகளில் உள்ள 18 வயதிற்குட்பட்டோரை விடுவிப்பது தொடர்பாகவும் யுனிசெவ்வின் தலைவருடன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பேச்சுகளை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'தமிழர் தாயகப் பகுதிகள், ' ஸ்ரீலங்காவின் 'கிளைமோர்த் தாக்குதல்கள்' எனத் தெரிவிக்கப்படுவதிலிருந்து ஐக்கிய நாடுகள் அமைப்புகள் விளங்கிக் கொள்ள முயலாதமை கவலையளிக்கின்றது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் பாரிய ஆட்லறி தாக்குதல்களை மேற்கொண்ட பிறகே யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதியை நோக்கிய ஏ - 9 பாதை மூடப்பட்டது. யாழ். குடாநாட்டில் உள்ள படையினருக்குப் பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் தாக்குதலாக இது விளங்கியது. மக்களின் போக்குவரத்திற்காக அரசினால் அமைக்கப்பட்ட வசதிகளும் புலிகளால் அழிக்கப்பட்டன.

முகமாலையில் உள்ள அரச படையினர் மீது விடுதலைப் புலிகள் திட்டமிட்ட தாக்குதலை மேற்கொண்டு வருகின்றமையாலேயே ஏ- 9 பாதையை திறக்க முடியாமலுள்ளது.

### பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை

யாழ். மக்களுக்கான இலகுவான போக்குவரத்திற்கென மன்னாரிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு கப்பல் சேவையை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் இதற்கான பாதுகாப்பு உத்தரவாதங்கள் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாகவே யாழ். குடாநாட்டிலிருந்து கப்பல் போக்குவரத்தை மேற்கொள்ள உதவுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழு பின்வாங்கியது. சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுக்கு இதுவரை அதற்கான பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படவில்லை.

விடுதலைப் புலிகள் தற்போது பொதுமக்கள் போக்குவரத்து என்ற போர்வையில் கப்பல்களில் இராணுவம் பயணம் செய்வதாக குற்றம் சாட்டுகின்றனர். வேறு எந்த அரச சார்பற்ற அமைப்பும் இதுவரை இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் வேண்டுமென்றால் சர்வதேச செஞ்சிலுவைக் குழு கப்பல்களைக் கண்காணிக்க அனுமதிக்கலாம். எனினும், விடுதலைப் புலிகள் இதனை மேற்கொள்ளமாட்டார்கள். அரசுக்கு எதிரான வெறுப்பைத் தூண்டுவதும் ஏ- 9 பாதையை திறந்து வரி வசூலிப்பதுமே அவர்களது நோக்கம்.

விடுதலைப் புலிகளின் மனித உரிமை மனிதாபிமான விவகாரப் பேச்சாளர் யாழ்ப்பாணத்திற்கு செல்லும் ஏ - 9 பாதை மூடப்பட்டதால் வன்னியில் உரிய மருத்துவ வசதிகள் இல்லையெனத் தெரிவிக்கிறார்.

எனினும், வன்னியில் நல்ல மருத்துவ வசதிகள் உள்ளன. அரசு தொடர்ந்து இந்த சேவையை வழங்குகின்றது. கிளிநொச்சி மருத்துவமனையை நாட்டின் சிறந்த மருத்துவமனையாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.-என்றுள்ளன.

(சி)

## வெளிமாவட்டங்களின் ஆசிரிய கலாசாலை மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.28

வெளிமாவட்ட ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சியை முடித்து இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள - தற்போது யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள - மாணவர்களை பலாலி ஆசிரிய கலாசாலை அதிபருடன் தொடர்புகொண்டு தமது விவரங்களைப் பதியுமாறு பிரதம ஆணையாளர் கேட்டுள்ளார்.

இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தாம் பயிற்சிபெற்ற ஆசிரிய கலாசாலைக்குச் செல்வதில் இடர்பாடுகள் ஏற்படுபவர்களையே பதிவு செய்யுமாறு கேட்டுள்ளார். (202)

## தென்மராட்சி வலய பிள்ளைநேய பாடசாலைகளை சான்றுப்படுத்தலில் வீரசிங்கம் ம.வி. முதலிடம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

தென்மராட்சி கல்வி வலயத்தில் பிள்ளைநேயப் பாடசாலைகளைச் சான்றிதழ்படுத்தலில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

பாடசாலைகளைத் தெரிவுசெய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இவ்வருடம் வலயத்தைச் சேர்ந்த 53 பாடசாலைகளில் யுனிசெவ் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பிள்ளைநேயச் செயற்றிட்டங்களின் புதிய திட்டத்திற்கமைய பத்து முக்கிய பண்புத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகள் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நாவற்குளி மகாவித்தியாலயம் ஆகியன முதல் 5 இடங்களைப் பெற்று பரிசில்களைப் பெற்றன.

ஏனைய அனைத்து பாடசாலைகளுக்கும் ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் இத்திட்டத்தினை வழிநடத்திய வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கும் வாண்மை விருத்திக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர் கல்வி பட்டப் படிப்புகள் பிரிவு பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமியும் சிறப்பு விருந்தினர்களாக யுனிசெவ் நிறுவன பிரதிநிதி யூகோ ஓசாவா, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி ஆர். சத்தியேந்திரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் யுனிசெவ் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படும் பிள்ளைநேய செயற்றிட்டங்களை சான்றிதழ்படுத்தி பரிசில்களை வழங்கியது யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சி கல்வி வலயம் என்பது குறிப்பிடத்தக்கது. (202-207)

### கரவெட்டியில் இடம்பெற்ற

## கொள்ளையுடன் சம்பந்தப்பட்ட இருவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

### மேலும் மூவரைப் பொலீஸார் தேடி வலைவீச்சு

யாழ்ப்பாணம் டிசெ 28

இரவு வேளையில் ஆயுதங்களுடன் கொள்ளையில் ஈடுபட்ட கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கே.அரியநாயகம் உத்தரவிட்டுள்ளார்.

இக்கோஷ்டியுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் மூவரைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

அண்மையில் கரவெட்டியில் உள்ள வீடொன்றுக்குள் பயங்கர ஆயுதங்களுடன் சென்ற கொள்ளைக் கோஷ்டியினர் வீட்டிலுள்ளவர்களைத் தாக்கியுள்ளனர்.

இதன்போது வீட்டில் இருந்தவர்கள் கூக்குரலிட அயலிலுள்ளவர்கள் ஒன்று கூடி கொள்ளையர் ஒருவரை மடக்கிப் பிடித்தனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

பிடிபட்டவர் பொலீஸரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவர் கொடுத்த தகவலின் படி மற்றுமொருவர் கைது செய்யப்பட்டார். இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(202-218)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 13 | சனிக்கிழமை |
| | 29.12.2007 |
| திதி : ஷஷ்டி | பி.இ. 03.15 |
| நட்சத்திரம் : | பூரம் |
| | பி.இ. 05.07 |
| கெற்போட்டம் ஆரம்பம் | |
| சுபநேரம் | : 03.28 - 04.58 |
| ராகுகாலம் | : 09.28 - 10.58 |

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.28

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் மாதாந்தம் நடத்தும் இசை நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் க.சோமசுந்தரம்தலைமையில்நடைபெறவுள்ளது.

குழுப்பாடல், மிருதங்க இசை, தமிழிசையரங்கு, இசைக்கச்சேரி, நாட்டியாஞ்சலி என்பன நிகழ்வில் இடம் பெறும். (202)

* * *

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வெள்ளிவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத்தின் தலைவர் சு.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஸ் கலந்துகொள்வார். (202)

* * *

வலி.தென்மேற்கு,டிசெ.28

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம் நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டி நடத்தும் பிரார்த்தனை நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூரிலுள்ள மன்றப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். மரியன்னை பேராலய உதவிப் பங்குத் தந்தை அருட்திரு. எஸ்.எட்வினாதன் அடிகளார் ஆசியுரை வழங்கி பிரார்த்தனையை ஆரம்பித்து வைப்பார். கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(202-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ருவேட் கிளார்க், பிரட் லீ வேகத்தில் 196 ஓட்டங்களுள் சுருண்டது இந்தியா!

## வலுவான முன்னிலை நோக்கி ஆஸி. அணி நகர்வு


மெல்போண், டிச.28

ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களான பிரட் லீ மற்றும் ஸ்ருவேட் கிளார்க் ஆகியோரின் வேகப் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாமல் மெல்போணில் நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட்டில் இந்தியா 196 ஓட்ட ங்களுக்குள் சுருண்டது. 147 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்ஸைத் தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா அணி நேற்றைய 2ஆம் நாள் ஆட்டநேர முடிவின் போது விக்கெட் இழப்பின்றி 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் மெல்போணில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. முதல் நாளான நேற்றுமுன்தினம் ஆட்டநேர இறுதியில் ஆஸ்திரேலியா 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 337 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அந்த அணியின் தொடக்க வீரர் ஹைடன் 125 ஓட்டங்களைக் குவித்தார். இந்தியத் தரப்பில் கும்ளே 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

இந்நிலையில் நேற்றுக் காலை 2ஆம் நாள் ஆட்டம் தொடங்கியதும் சஹீர்கான், ஆஸ்திரேலியாவின் கடைசி விக்கெட்டை வீழ்த்தினார். அந்த அணி 343 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சஹீர்கான் மொத்தம் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து இந்தியா தனது முதல் இன்னிங்ஸை ஆட்டத்தொடங்கியது. டிராவிட் மற்றும் ஜாபர் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஆட்டத்தின் 9ஆவது ஓவரில் - பிரட் லீ வீசிய பந்தில் 4 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஜாபர் ஆட்டமிழந்தார். அவரை அடுத்து 5 ஓட்டங்களுடன் டிராவிட், கிளார்க்கின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். தொடர்ந்துவந்த லக்ஸ்மன் 26 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது பிரட் லீயின் வேகத்தில் வெளியேறி ஏமாற்றமளித்தார். அப்போது இந்திய அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 55 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



ஸ்ருவேட் கிளார்க்கின் வேகத்தில் சச்சின் 'போல்ட்' ஆகும் காட்சி

தொடர்ந்து 4ஆவது விக்கெட்டில் இணைந்த அனுபவ வீரர்களான சச்சின் டெண்டுல்கர் மற்றும் சௌரவ் கங்குலி ஆகியோர் இந்திய அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். இந்த ஜோடி சிறிதுநேரம் ஆஸி. அணியை மிரட்டியது. இருவரும் தம்மிடையே 65 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த நிலையில் சச்சின் டெண்டுல்கர் 62 ஓட்டங்கங்களுடன் கிளார் வேகத்தில் 'போல்ட்' ஆனார். 77 பந்துகளை எதிர்கொண்டிருந்த அவர் 7 பவுண்டரிகளையும் ஒரு சிக்ஸரையும் தனது ஓட்ட எண்ணிக்கையில் சேர்த்திருந்தார். டெஸ்ட் அரங்கில் சச்சின் 48ஆவது அரைச்சதத்தை நிறைவுசெய்திருந்தார்.

அணிக்கு நம்பிக்கை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட யுவராஜ் சிங் மற்றும் டோனி ஆகியோர் கிளார்க் வீசிய 48ஆவது ஓவரில் முறையே 4, 6ஆவது பந்துகளில் ஓட்டமெதுவும் பெறாமல் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து வெறுப்பேற்றினர். இவர்களின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து இந்தியா தத்தளிக்கத் தொடங்கியது.

கடுமையாகப் போராடிய கங்குலி 43 ஓட்டங்களுடன் ஹொக்கின் சுழலில் சிக்கி விக்கெட்டை இழந்தார். அடுத்துவந்த பின்வரிசை வீரர்களால் நீண்டநேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இறுதியில் இந்தியா 71.5 ஓவர்களில் 196 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து சுருண்டது. பின்வரிசையில் ஓரளவு சிறப்பாக ஆடிய அணித் தலைவர் கும்ளே 27 ஓட்டங்களை எடுத்தார். ஆஸியின் பந்துவீச்சில் பிரட் லீ மற்றும் ஸ்ருவேட் கிளார்க் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர். பிரட் ஹொக் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

டெண்டுல்கர் மற்றும் கங்குலி தவிர இந்திய ஆட்டக்காரர்கள் யாரும் சிறப்பாக ஆடாதமையால் இந்தியா இந்த டெஸ்ட்டில் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா இந்தியாவை விட முதல் இன்னிங்ஸில் 147 ஓட்டங்கள் கூடுதலாகப் பெற்றது. தொடர்ந்து இரண்டாம் இன்னிங்ஸை ஆடிய ஆஸி. அணி நேற்றைய 2ஆம் நாள் ஆட்டநேர முடிவின் போது விக்கெட் இழப்பின்றி 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பில் ஜக்கிஸ் 10 ஓட்டங்களுடனும், மத்தியூ ஹைடன் 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். தற்போது ஆஸ்திரேலிய அணி 179 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

போட்டியின் 3ஆம் நாள் ஆட்டம் இன்று நடைபெறும்.

## மெல்போண் துளிகள்...

* 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய 7ஆவது இந்திய வீரர் என்ற பெருமை, சௌரவ் கங்குலிக்கு கிடைத்துள்ளது. முன்னதாக சச்சின் (143), கபில்தேவ் (131), கவாஸ்கர் (125), கும்ளே (122), வெங்சர்க்கார் (116), டிராவிட் (116) ஆகியோர் இந்த பெருமையைப் பெற்றுள்ளனர்.

* டெஸ்ட் போட்டிகளில் ஹைடன் தனது 28ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். இந்திய அணிக்கு எதிராக 4ஆவது சதமாகவும் அது அமைந்தது. அதிக டெஸ்ட் சதம் அடித்த ஆஸி. வீரர்கள் பட்டியலில் பொண்டிங் (33சதம்), ஸ்ரீவ் வோ (32), பிரட்மன் (29) ஆகியோருக்கு அடுத்தபடியாக ஹைடன் உள்ளார். மெல்போண் கிரிக்கெட் மைதானத்தில் ஹைடன் அடிக்கும் 6ஆவது சதம் இதுவாகும். 2004இல் நடைபெற்ற தொடரிலும், இந்தியாவுடன் நடந்த மெல்போண் டெஸ்ட்டில் அவர் 136 மற்றும் 53 ஓட்டங்களைக் குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மெல்போர்ன் மைதானத்தில் அதிக சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் ஹைடன் 2ஆவது இடத்தில் உள்ளார். பிரட்மன் 9 சதங்கள் அடித்து முதல் இடத்தில் இருக்கின்றார்.

* டெஸ்ட் போட்டிகளில் அதிக பிடியெடுத்த வீரர்கள் பட்டியலில் மார்க் ரெய்லரை முறியடித்து டிராவிட் (159 பிடிகள்) 4ஆவது இடத்துக்கு முன்னேறினார். மார்க் வோ (181), லாரா (164), பிளமிங் (161), மார்க் ரெய்லர் (157) பிடிகளை எடுத்துள்ளனர்.

* மெல்போண் மைதானத்தில் 2 தடவைகள் ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய 3ஆவது இந்தியப் பந்துவீச்சாளர் என்ற பெருமை கும்ளேக்கு கிடைத்தது. முன்னதாக கபில்தேவ், சந்திரசேகர் ஆகியோர் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். ஆஸி. அணிக்கு எதிராக 10 தடவைகள் ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய 4ஆவது வீரராக கும்ளே (15 டெஸ்டில்) பதிவானார். அவர் 35ஆவது முறையாக ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட் கைப்பற்றியுள்ளார். இந்தப் பட்டியலில் முரளிதரன் (62), வோர்ன் (37) ஹாட்லி (36) ஆகியோர் முதல் 3 இடங்களில் உள்ளனர்.

**விளையாட்டு அரங்குகளில்**

# அடுத்து வரும் நாட்களில் மெல்போணில் ஓட்டங்கள் குவிப்பது கடினம் - ஹைடன் கணிப்பு

மெல்போண், டிச.28

மெல்போண் மைதானத்தில் அடுத்துவரும் நாட்களில் ஓட்டங்கள் குவிப்பது கடினம் என்று மத்தியூ ஹைடன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக மெல்போணில் நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் ஆஸி. அணியின் ஓட்டக்குவிப்புக்குபக்கபலமாகவிருந்தஹைடன் சதமடித்து அசத்தியிருந்தார். முதல் டெஸ்ட் போட்டியின் நிலை குறித்து ஹைடன் கூறியவை வருமாறு:-

''அடுத்த வரும் நாட்களில் மெல்போண் மைதானத்தில் துடுப்பெடுத்தாடுவது நிச்சயம் கடினமாக இருக்கும். நாங்கள் சில விக்கெட்டுகளை உடனுக்குடன் இழந்தோம். இதற்கு கடினமான ஆடுகளம்தான் காரணம். இத்தகைய சூழலில், இந்தியாவின் பந்துவீச்சைச் சமாளித்து சதம் அடித்து இருக்கிறேன். இது எனது சிறந்த சதங்களில் ஒன்றாகும். துடுப்பெடுத்தாடுவதில் எவ்வளவு சிரமம் உள்ளது என்பது அடுத்து வரும் நாட்களில் வெளிப்படும். சரியான திசையில் களத்தடுப்பாளரை நிறுத்தி இந்தியாவுக்கு நெருக்கடி அளிப்போம். இதன் மூலம் இந்தியாவின் ஓட்டக் குவிப்பைக் கட்டுப்படுத்துவோம்.'' - இவ்வாறு ஹைடன் கூறினார்.

தனது சுழல் மூலம் ஆஸ்திரேலியாவை மிரட்டிய இந்திய அணித்தலைவர் கும்ளே முதல்நாள் ஆட்டம் முடிந்த பிறகு கூறியவை வருமாறு:-

''ஒவ்வொரு தொடரிலும் முதல் டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸ் என்பது முக்கியமானது. நாங்கள் முதலில் துடுப்பெடுத்தாட விரும்பினோம். ஆனால், நாணயச் சுழற்சியில் அதிஷ்டம் இல்லை. சஹீர்கான், ஆர்.பி.சிங்கின் பந்துவீச்சு மிக நேர்த்தியாக இருந்தது. ஆனால், ஹைடனும், ஜக்கிஸும் அதனைச் சமாளித்து ஓட்டங்களைக் குவித்தனர். இதனால், தொடக்கத்தில் பின்னடைவைச் சந்தித்தோம். உணவு இடைவேளைக்குப் பிறகு எங்களது தாக்குதலில் தீவிரம் காட்டினோம். இதன் மூலம் சரிவில் இருந்து மீண்டும் சிறப்பான நிலையை எட்டினோம். ஜக்கிஸ், பொண்டிங் ஆகியோரின் விக்கெட்டுகள் ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தியது. மொத்தத்தில் எல்லா வீரர்களும் சிறப்பாகச் செயல்பட்டமை திருப்தி அளிக்கிறது. முதல் நாளில் 9 விக்கெட்டுகளை வீழ்த்தியது உண்மையிலேயே மகிழ்ச்சியாக உள்ளது.'' - இவ்வாறு கும்ளே கூறினார்.

# சாதிக்கத் தயார் - சானியா



புதுடில்லி, டிச.28

ஹோப்மன் கிண்ண டெனிஸ் தொடரில் சாதிக்கத் தயாராக இருக்கின்றார் என சானியா நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் ஹோப்மன் கிண்ண டெனிஸ் தொடர் நாளை தொடங்குகிறது. இத்தொடரின் 'பி' பிரிவில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, செக். குடியரசு அணிகள் இடம்பெற்றுள்ளன.

இத்தொடர் குறித்து சானியா கூறியவை வருமாறு:-

''இம்முறை மிகக் கடினமான சுற்றில் இடம் பெற்றுள்ளோம். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, செக். குடியரசின் சவால்களைச்சந்திக்க நானும் போபண்ணாவும் தயாராக இருக்கிறோம். டெனிஸில் தலைசிறந்து விளங்கும் நாடுகளுக்கு மட்டுமே ஹோப்மன் கிண்ணத் தொடரில் வாய்ப்பு அளிக்கப்படும். தற்போது தகுதிச் சுற்றில் விளையாடாமலே முதன்முறையாக இந்தியாவுக்கு நேரடி வாய்ப்பு கிடைத்திருப்பது கௌரவமான விடயம். எட்டு முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற செரீனாவுக்கு எதிராக விளையாட காத்திருக்கிறேன். இவரைப் போ[illegible] திறமைமிக்க வீராங்கனையுடன் விளை[illegible]டுவதை மிகவும் பெருமையாகக் கருதுகிறேன். எனது ஆட்டத்திலும் உடல் தகுதியிலும் அதிக அக்கறை செலுத்தி வருகிறேன். குறிப்பாக சிறப்[illegible] கடும் பயிற்சி மேற்கொண்டுள்ளேன்.'' இவ்வாறு சானியா கூறினார்.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் மேற்கிந்தியத் தீவுகள் சிறப்பான தொடக்கம்

போர்ட் எலிசபெத், டிச,28

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட்டில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சிறப்பான தொடக்கத்தைப் பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல்நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 281 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



அதிரடியாக ஆடிய சாமுவேல்ஸ்

3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருக்கிறது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் போர்ட் எலிசபெத் நகரில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் மேற்கிந்தியத் தீவுகளைத் துடுப்பெடுத்தாடும்படி கேட்டுக்கொண்டது. காயத்தால் 3 வாரமாக ஓய்வில் இருந்த மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் கிறிஸ் கைல் உடல்தகுதி பெற்றதையடுத்து அவரும், கங்காவும் ஆரம்ப வீரர்களாக இறங்கினார்க[ள்].

கைலின் ஆட்டத்தில் அனல் பறந்தது. ஒருநாள் போட்டி போன்று அதிரடியாக நாலாபக்கமு[ம்] பந்துகளை விரட்டினார். இதனால், மேற்கிந்தியத் தீவுகளின் ஓட்ட வேகம் ஜெட் வேகத்தி[ல்] உயர்ந்தது. முதல் விக்கெட்டுக்காக அவர்கள் 98 ஓட்டங்களைச் சேர்த்தனர். இதற்காக [illegible] ஓவர்களை மட்டுமே எதிர்கொண்டனர். இந்நிலையில் கங்கா 33 ஓட்டங்களுடன், அன்ட்[ரே] நெல்லின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்த ஓவரில் கைலும், போல் ஹரீஸின் சுழலி[ல்] கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 49 பந்துகளில் 66 ஓட்டங்களை விளாசினா[ர்]. இதில் 13 பவுண்டரிகள் அடங்கும். இதன் பிறகு 2ஆவது விக்கெட்டுக்காக வந்த மோட்ரன் [illegible] ஓட்டங்களுடன் நிற்னியின் வேகத்தில் வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து 4ஆவது விக்கெட்டுக்காக கைகோத்த சாமுவேல்ஸ், சந்தர்போ[ல்] இணை மிகவும் பொறுமையாக ஆடி அணியைச் சரிவில் இருந்து மீட்டது. ஓட்ட எண்ணிக்[கை] 277 ஆக உயர்ந்தபோது, சாமுவேல்ஸ், ஸ்ரைனின் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 12 பவு[ண்]டரிகளுடன் 94 ஓட்டங்களைக் குவித்தார். சாமுவேல்ஸ் 14 ஓட்டங்களிலேயே 'அவுட்' ஆ[கி]யிருக்க வேண்டியவர். அவர் பிடிகொடுத்த பந்து 'நோ-போல்' என்று அறிவிக்கப்பட்டதால் அப்போ[து] அவர் தப்பினார். சாமுவேல்ஸ் டெஸ்ட் அரங்கில் 8ஆவது அரைச்சதம் கடந்திருந்தார்.

போதிய வெளிச்சம் இல்லாததால் முதல்நாள் ஆட்டம் 6 ஓவர்கள் முன்னதாக முடி[illegible] நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல் நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அ[ணி] முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 281 ஓட்டங்களை எடுத்திருந்தது. சந்தர்போ[ல்] [illegible]னும், பிராவோ ஓட்டமெதுவுமின்றியும் களத்தில் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை அன்று பஞ்சரத பவனி இடம்பெற்றது. ஐயனாருக்குப் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சித்திரத்தேர் முன்னுக்கும் அதனையடுத்து சிவனின் சித்திரத் தேருமாக ஐந்து தேர்கள் ஆலயத்தின் முன் வீதியில் நிறுத்தப்பட்டிருப்பதை முதலாவது படத் தில் காணலாம். மழைவெள்ளத்தில் அடியார்கள் அங்கப் பிரதிஷ்டை செய்வதை இரண்டாவது படத்திலும் தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் நாதகான மழை பொழிவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (250)

# பாவையர்க்கு வாழ்வளிக்கும் பாவை நோன்பு

**கடந்த 17ஆம் திகதி ஆரம்பமான பாவை நோன்பு விரதம், எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

மார்கழி மாதம் பிறந்துவிட்டால் உள்ளத்தில் சமய உணர்வு வேகம் பெற்று ஊற்றெடுக்கிறது. வைகறையில் துயிலெழுவதும், புனித நீராடி இறைவனைத் துதித்து பஜனைகள் செய்வதும், ஆலயஞ் சென்று வழிபட்டும் மக்கள் செயற்படுவது மரபு. திருப்பாவைப் பாடல்களைத் திருமாலடியார்களும் திருவெம்பாவைப் பாடல்களைசிவனடியார்களும் புனிதமாகக் கருதி ஆலயங்களில் பாடி இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் வழக்கமும் உள்ளது. ஆலயங்கள் மட்டுமன்றி தனிப்பட்டோரும் இல்லங்களில் இவற்றை பக்தியுடன் பாடி வருவதையும் காணலாம்.

காஞ்சி காமகோடி பீடாதிபதியாகிய பெரியவர்கள் இப்பாடல்களைக் குழந்தைகள் முதல் முதியோர் வரை, ஆண், பெண் இருபாலரும் பக்தி சிரத்தையுடன் பாடித் திருவருளைப் பெறவேண்டும் என்று கூறியுள்ளார்கள். தமிழிலக்கியப் பூஞ்சோலையில் தெய்வீக மணங்கமழும் இன்னிசைப் பூங்கொத்துக்கள் என திருப்பாவையும் திருவெம்பாவையும் பெருமையுடையவை.

'பாவை' என்ற சொல் பதுமை, சித்திரம், பெண், நோன்பு எனப் பல பொருள் கொண்டு வழங்கப்படும். தொல்காப்பியத்தில் 'பாவை' என்ற வகையிலான பாடலுக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. எனினும் 'பாவை நோன்பு' என்ற சொற்தொடரும் வழக்கிலுள்ளது. மார்கழி மாதம் கன்னிப் பெண்கள் நடத்தும் வழிபாட்டையே இது குறிப்பதாகும். 'பாவை நோன்பு' ஏன் கைக்கொள்ளப்படுகிறது? நாட்டில் வளம் குறைந்தால், மழை பெய்யாதிருப்பின், பஞ்சம் ஏற்படலாம். இங்ஙனம் ஏற்படும் வறுமையைத் தவிர்க்கவே இந்நோன்பு நோற்கப்பட்டு வந்துள்ளது எனத் தெரிகிறது.

பனிக்காலத்தில் (ஏமத்தருதுவின்) முதன் மாதம் மார்கழி. இம்மாதம் தினந்தோறும் கன்னிப் பெண்டிர் வைகறையில் துயிலெழுந்து கூடிச்சென்று நதிகளில் நீராடுவர். பின்னர் 'காத்தியாயனி' தேவியின் உருவத்தை மண்ணால் செய்து பிரதிஷ்டை செய்து வழிபடுவர். அவ்வேளை அவர்கள் தேவியைத் துதித்துப் பாடுவர். இங்ஙனம் பாவையர் பாவையை உரு வாக்கி அதைத் துதித்துப்பாடுவதால், பாவைப்பாட்டு என வழங்கலாயிற்று என்பர் ஆன்றோர். இத்தகைய நோன்பையொட்டி எழுந்தவைதான் பாவைப்பாடல்கள் என்பதில் ஐயமில்லை.



இப்பாவைப் பாடல்களில் துயிலெழுப்புவதும், பனிநீராடுவதும் குறிப்பிடப்பட்டிருக்கக் காணலாம். திருப்பாவையில் ஆண்டாளும், திருவெம்பாவையில் மணிவாசகரும் இவ்வமைப்பினைக் கடைப்பிடித்துள்ளனர். துயில் எழுதல், துயிலெழுப்புதல், நீராடல் என்பன பல இடங்களில் இப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

இந்த இரண்டு பிரபந்தங்களிலும் முற்பகுதியில் துயில் எழுப்பும் கருத்துகள் அமைந்துள்ளன. இவற்றுள் 'நீராடல்' என் பதும் வெளிப்படையாகவே குறிக்கப்பட்டுள்ளன. 'தெய்வம்' என்ற உயரிய குறிக்கோளையே இவ்விருபாவைப் பிரபந்தங்களும் கருப் பொருளாகக் கொண்டுள்ளன.

ஸ்ரீமத் பாகவதத்தில் (10ஆவது ஸ்கந்தத்தில் 22ஆம் அத்தியாயத்தில்) மார்கழி நோன்பு குறிப்பிடப்படுகிறது. பிங்கலந்தையிலும் கன்னியர் நீராடுதல் பற்றிய கூற்றுக்கள் காணப்படுகின்றன.

திருப்பாவை பிறந்த இடம் வைணவத் தலமான ஸ்ரீ வில்லி புத்தூர். திருவெம்பாவை பிறந்த இடம் சைவத் தலங்களுள் ஜோதிலிங்கத் ஸ்தலமான திருவண்ணாமலை. சிலர் திருப்பெருந்துறையையும், தில்லையையும் திருவெம்பாவை பிறந்த இடமாகக் கூறுவர். திருவண்ணாமலை என்பதை முதற் பாடலும் இறுதிப் பாடலும் உறுதிப்படுத்தும். திருப்பாவை முப்பது மலர்களாலான ஒரு பாமாலை. திருவெம்பாவையோ இருபது மலர்களாலான மற்றொரு பாமாலை.

கன்னிப் பெண்கள் தாங்கள் நல்ல கணவரை அடையவேண்டும் என்று விரும்புவது திருவெம்பாவையின் ஒன்பதாவது பாட்டிலும் பத்தொன்பதாவது பாட்டிலும் வெளிப்படையாக உள்ளது. திருப்பாவையில் கண்ணனைக் கணவனாகப் பெற வேண்டும் என்ற கோபியரின் விருப்பம் சுட்டிக்காட்டப்படுகிறது. ஜீவாத்மா, பரமாத்மா என்ப வற்றிற்கிடையிலான உறவு போல கன்னிப் பெண்களுக்கும் அவர்களின் காதலர்களுக்குமிடையே உள்ள உறவு அமைய வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படுவதாகக் கூறினால் மிகையாகாது.

திருவெம்பாவையில் பத்தொன்பதாம் பாடலும், திருப்பாவையின் 29ஆம் பாடலும் உயிர்நிலைப்பாட்டுக்கள் எனக் கருதப்படுபவை. 'நாத'னாகவும், 'நாயக'னாகவும் முறையே சிவனையும் திருமாலையும் கருதி, மாணிக்கவாசகரும், ஆண்டாளும் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடினார்கள். இவைகள் நாயக, நாயகி பாவத்

ஞானக்கதிர்

தில் தமிழில் அமைந்த உத்தமமான இசை இலக்கியங்கள் எனவும் கருதப்படுகின்றன.

மார்கழி மாதம் திருவாதிரை நாள். சிவ தரிசனம் செய்வதற்குரிய சிறப்புடைய தினமாகும். 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்' என்ற தொடர் இதனை விளக்கும். அன்றைய தினம் திருவெம்பாவைத் திருவிழாவின் பூர்த்தி நாளாகும். திருப்பாவைத் திருவிழா வைணவர்களுக்கு 30 நாள்கள் வழிபாட்டுத்தினங்களாகும். திருப்பாவை, திருவெம்பாவை இவற்றிலுள்ள பாடல்களை இம்மாதத்தில் முறை யாக ஓதி இறை வழிபாடு செய்தால் வேண்டிய நன்மையைப் பெற வழி ஏற்படும். வழிபட்டால் தான் நன்மையைப் பெற வழி வாய்க்கும். எனினும் சிறப்பாகக் கன்னியர் கருத்துக்கும், கண்ணுக்கும் உகந்த கண் ணியமுள்ள கணவரைப் பெறக் கடைக்கொள்ள வேண்டிய நோன்பு 'பாவைநோன்பு' என உறுதி

# மட்டு. மாவட்ட வெள்ளப்பாதிப்புக்கு உதவி வழங்க ஒரு கோடி ரூபா நிதி

## அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு ஒதுக்கீடு

மட்டக்களப்பு,டிசெ.28

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு ஒரு கோடி ரூபா நிதியை வழங்கியுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் கே.மகேசன் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு பாதிப்பின் தன்மைக்கு ஏற்ப இந்த நிதியுதவி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிதியில் இருந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டதுடன், தற்போது உலர் உணவு நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்ப்ட்டு வருகின்றன.

வெள்ளப்பெருக்கு் காரணமாக சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிராம சேவை உத்தியோகத்தர்கள் மூலமாக இது தொடர்பான சேதவிவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன- என்றார்.

இதேவேளை, வெள்ளம் படிப்படியாக வடிந்தோடி வருவதை அடுத்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி வருகின்றனர். எனினும், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசசார்பற்ற நிறுவனங்களும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (சி)

## யாழ்.மாவட்டத்தில் 133 உப அஞ்சல் அலுவலகங்கள் இயங்குகின்றன

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 133 உப அஞ்சல் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

அண்மையில் பண்டத்தரிப்பு பிரான்பற்றில் உருவாக்கப்பட்டு இயங்கிவரும் உப அஞ்சல் அலுவலகமே 133ஆவது என யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெபரட்ணம் தெரிவித்தார். (202-95)

# இலங்கையில் இந்த வருடம் 7 வீத பொருளாதார வளர்ச்சி

## மத்திய வங்கி அறிக்கையில் தகவல்

கொழும்பு,டிசெ.28

நாட்டின் பொருளாதார வளர்ச்சி இவ்வருடம் மூன்றாவது காலாண்டுப் பகுதியில் 7 வீதமாகக் காணப்பட்டதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி கடந்த புதன்கிழமை விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கம் 19.3 வீதமாகக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையின் பொருளாதாரம் மூன்றாவது காலாண்டுப் பகுதியில் 7 வீதமாக வளர்ச்சியடைந்தது. முதலாவது காலாண்டுப் பகுதியில் 6.2 வீதமாக இது காணப்பட்டது.

கைத்தொழில் சேவை துறைகளின் வளர்ச்சியும் விவசாய துறையின் புத்துயிர்ப்பும் இதற்கு காரணம்.

தேயிலை மற்றும் இறப்பரில் உயர் உற்பத்தி காணப்படுகின்றது. சாதகமான காலநிலையும் உலகளாவிய ரீதியில் அதற்கான தேவை அதிகரித்தமையும் இதற்கு காரணம்.

தேயிலை விவசாய ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக முதல் பத்து மாத காலப் பகுதியில் ஏற்றுமதி 13 வீதமாக அதிகரித்துள்ளது.

2006ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களுடன் ஒப்பிடும்போது இவ்வருடம் 7.3 வீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக வர்த்தக நிலுவை குறைவடைந்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு நாணய கையிருப்பு ஒக்ரோபர் மாத முடிவில் 322 கோடி அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.

புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் படி பணவீக்கம், நவம்பர் மாதத்தில் 19.3 வீதமாக காணப்பட்டது. அதேவேளை, நவம்பரில் வருட சராசரி பணவீக்கம் 19.4 வீதமாகக் காணப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் பொருள்களான பால்மா, கோதுமை, பெற்றோலியம் போன்றவற்றின் விலைகள் 30 வீத அதிகரிப்பைக் காட்டியதனாலேயே பணவீக்கம் இரண்டாவது காலாண்டில் அதிகரித்தது என்று மத்திய வங்கி தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (சி)

# குற்றச்சாட்டு தாக்கலாகாததால் புதனன்று பிரான்ஸ் ஊடகவியலாளர்கள் விடுவிப்பு

காலி, பூஸா தடுப்புமுகாமிற்கு அருகில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டு ஊடகவியலாளர்கள் இருவரையும் குற்றச்சாட்டுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில் விடுவித்துள்ளது கொழும்பு பிரதான நீதிமன் றம்.

பூஸா தடுப்பு முகாமிற்கு அருகிலிருக்கும் வீதித்தடை ஒன்றை ஆவணப்படுத்துவதற்காகப் படம் பிடித்துக்கொண்டிருந்த வேளையில் இவர்கள் அங்கிருந்த படையினரால் கைது செய்யப்பட்டு ரத்கம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

'பிரான்ஸ் 24 ரி.வி.' என்ற ஊடகத்தைச் சேர்ந்த இருவரும் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட இருவரும் உடனடியாகவே கொழும்பிலிருக்கும் பிரான்ஸ் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர் என அறியமுடிந்தது.

இவர்களுடன் கைதான மேலும் 16 பேரும் நேற்றுமுன்தினம் நீதிமன்றால் குற்றச்சாட்டுகள் எதுவும் தாக்கலாகாததால் விடுவிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் ஊடுருவலைத் தடுக்க நாகப்பட்டினத்தில் விசேட முகாம்

மண்டபம்,டிசெ.28

இலங்கையில் அதிகரித்துவரும் போர்ப் பதற்றத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தவிர்க்கும் - தடுக்கும் - வகையில் தமிழகத்தின் நாகப்பட்டின கடலோரப் பகுதியில் இந்தியக் கடலோரக் காவற்படையின் முகாமொன்று அமைக்கப்படவுள்ளது.

"விடுதலைப் புலிகள் மற்றும் அந்நியர் ஊடுருவலைத் தடுக்க நாகப்பட்டினத்தில் இந்தியக் கடலோர காவற்படை முகாம் விரைவில் அமைக்கப்படவுள்ளது" - என்று தென் பிராந்திய ஐ.ஜி., ராஜேந்தர சிங் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று நாள் ஆய்வுப் பயணமாக, விமானம் மூலம் உச்சிப்புளி வந்த ஐ.ஜி.,.மண்டபத்தில் தங்கி 'ஹோவார் கிராப்ட்' கப்பலில் பாக் ஜல சந்திக் கடற் பகுதியிலுள்ள தீவுகள், சர்வதேச கடல் எல்லைப் பகுதி என்பவற்றுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டார். பின்னர் ஊடகவியலாளர்களைக் கரையில் சந்தித்த அவர் -

"கடல் பகுதியில் அந்நியர் ஊடுருவலைத் தடுக்க தமிழகத்தில் நாகப்பட்டினம், ஒரிசா மாநிலத்தில் கோபல் பூர் பகுதியில் புதிதாக இந்தியக் கடலோரக் காவல் படைமுகாம் அமையவுள்ளது. வான் வழியைக் கண்காணிக்க தஞ்சாவூர், புதுச்சேரி, தூத்துக்குடி ஆகிய மூன்றில், ஏதாவது ஒரு இடத்தில் விமானத்தளம் அமைக்கப்படவுள்ளது.

'ஆழ்கடல் ரோந்து பணிக்காக 375 கோடி ரூபா (இந்திய) மதிப்பில் மூன்று புதிய கப்பல்கள், ஆழம் குறைவான பகுதியில் ரோந்து செல்ல ஐந்து கப்பல்கள்,மேலும் 16 சிறிய கப்பல்கள் தேவை என மத்திய அரசுக்கு நாம் பரிந்துரைத்துள்ளோம்.

கடலில் மீனவர்கள் ஆபத்தில் சிக்கும்போது 'சிக்னல்' கொடுக்கும் கருவியை 'இஸ்ரோ' வடிவமைத்துள்ளது. இக்கருவியை முதன் முதலாகத் தமிழகத்தில் சென்னைப் பகுதியிலுள்ள விசைப்படகுகளுக்கு தமிழக அரசு மூலம் வழங்கவுள்ளோம். இக்கருவியை மீனவர்கள் பயன்படுத்தும் போது எந்த இடத்தில் மீனவர்கள் ஆபத்தில் சிக்கி உள்ளனர் என்பதை அறிய முடியும். இதன் மூலம் மீட்புப் பணியில், கடலோர காவல் படையினர் எளிதாக ஈடுபட முடியும்" என்றார். (சி)

# முதல்வரானார் நரேந்திரமோடி

காந்திநகர், டிச.27

குஜராத் தலைநகர் காந்திநகரில் இடம் பெற்ற வண்ணமயமான விழாவில் அம் மாநில முதலமைச்சராகத் தொடர்ந்து மூன்றாவது தடவையாக நரேந்திர மோடி கடந்த செவ்வாய்க்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

குஜராத் மாநில சட்டப்பேரவைக்கு நடந்த தேர்தலில் 117 இடங்களைப் பிடித்து பா.ஜ.க. தொடர்ந்து நான்காவது முறையாக ஆட்சி அமைக்கிறது. இதைத் தொடர்ந்து மோடியின் பதவியேற்பு விழா அகமதாபாத்தில் உள்ள சர்தார் படேல் மைதானத்தில் நடைபெற்றது.

கோலாகலமாக நடைபெற்ற இவ்விழாவில் குஜராத்தின் முதலமைச்சராகத் தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நரேந்திர மோடிக்கு ஆளுநர் நவல் கிஷோர் சர்மா பதவிப் பிரமாணமும், இரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

பா.ஜ.கவின் மூத்த தலைவரும், அக்கட்சியின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளவருமான எல்.கே.அத்வானி, கட்சியின் தலைவர் ராஜ்நாத்சிங்,மூத்த தலைவர்களான வெங்கையா நாயுடு, அருண் ஜேட்லி, பா. ஜ.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் இந்தப் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர்.

மேலும், தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர்கள் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், மனோகர் ஜோஷி உட்படப் பலர் பங்கேற்றனர். (சி)

# குறி சொல்லும் சாமியார்களை கணக்கெடுக்கும் உளவுத்துறை!

சென்னை,டிச27

தமிழகத்தில் 'குறி' சொல்லும் சாமியார்கள் மீது கண்வைக்கத் தொடங்கியிருக்கும் புலனாய்வுத்துறை அதிகாரிகள், சாமியார்களைக் கணக்கெடுக்கும் பணியை முடுக்கி விட்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சென்னையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி தாம்பரம், பள்ளிக்கரணை, தி.நகர், தேனாம்பேட்டை உட்பட நகர் முழுவதும் 50இற்கும் மேற்பட்ட குறி சொல்லும் சாமியார்கள் இருப்பது தெரிய வந்துள்ளது. அதேபோல ஆசிரமங்கள் குறித்தும் தகவல்கள் சேகரித்து வருகின்றனர். (சி)

# ஆழிப்பேரலைக்கு காவுகொடுத்த 4 குழந்தைகளையும் பெறச் சபதம்

குளச்சல்,டிச.28

ஆழிப்பேரலைக்குக் காவு கொடுத்த நான்கு குழந்தைகளையும் மீண்டும் பெறுவேன் என சபதமிட்டு அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளார் தமிழகத்தைச் சேர்ந்த தாய் ஒருவர்.

நான்கு குழந்தைகளைப் பறிகொடுத்த பெண் முன்னர் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்தார். பின்னர் மறு அறுவைச் சிகிச்சை பெற்று இரு குழந்தைகளைப் பெற்றார்.

தற்சமயம் கூட மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுக்கும் வகையில் கர்ப்பமாக உள்ளார். நான்காவது குழந்தையைப் பெறும்வரை தான் ஓயமாட்டார் எனவும் அவர் சபதமிட்டுள்ளார்.

குளச்சல் அருகேயுள்ள கடற்கரையோரக் கிராமமான கொட்டில்பாட்டையைச் சேர்ந்தவர் ராஜ். இவருடைய மனைவி ஆக்னஸ். இவர்களுக்கு நான்காவது குழந்தை பிறந்ததும் இனிக் குழந்தை வேண்டாம் என்று ஆக்னேஸ், குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டார்.

இந்தச் சூழ்நிலையில், அவர்களது வாழ்க்கையில் விதி விளையாடியது. கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலை, பிஞ்சுக் குழந்தைகள் நால்வரையும் கடலுக்குள் இழுத்து சென்றது. இதில் பிரதீஷா, ரஞ்சிதா ஆகிய இருவரின் உடல்கள் மட்டும் கிடைத்தன. மற்ற இரு குழந்தைகள் என்ன ஆனார்கள் என்று இதுவரையிலும் தெரியவில்லை.

இந்த நிலையில், பேரலைக்கு வாரிசுகளைத் தொலைத்தவர்களில் குடும்பக் கட்டுப்பாடு செய்தவர்களுக்கு மறு அறுவைச் சிகிச்சை நடத்தி, அவர்கள் குழந்தை பெற்றுக் கொள்ளத் தமிழக அரசு வழிவகை செய்தது. இதையறிந்த ராஜ் - ஆக்னேஸ் தம்பதியர் மனம் நெகிழ்ந்தனர். இதன் மூலம் விடிவு காலம் ஏற்படும் என்று அவர்கள் மனதில் நம்பிக்கை ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து சில நாட்களில் ஆக்னஸ் நாகர்கோவிலிலுள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் மறு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்.

இறந்த 4 குழந்தைகளையும் பெற்று எடுப்பேன் என்ற சபதத்தின்படி தற்சமயம் அவர் மூன்றாவது குழந்தைபெறத் தயாராகி வருகிறார். தற்போது அவர் 3 மாத கர்ப்ப மாகவுள்ளார். (சி)


## வாழ்த்துகின்றோம்



யாழ். இந்து மகளிர் கல்லூரியில்
உபஅதிபராக, பகுதித் தலைவராக, ஆசிரியராக கடமையாற்றிய
திருமதி
**காந்திமதி சிவநேசன்**
28.12.2007இல் ஓய்வு பெறுகிறார்.

ஆரம்பக்கல்வி: யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை
இடைநிலைக்கல்வி:- யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
கல்வித்தகைமை:- கலைப்பட்டதாரி: பேராதனைப் பல்கலைக்கழகம் - 01.10.1969
பட்டப்பின் கல்வி டிப்ளோமா - திறந்த பல்கலைக்கழகம் - 01.03.1980

**ஆசிரிய சேவை விபரம்:**
யா/ஆனைக்கோட்டை உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை: 01.11.1976-31.12.1980
யா/இந்து மகளிர் கல்லூரி: 01.01.1981 - 27.12.2007
பகுதித்தலைவர்:-01.09.1992 - 15.01.2006
உபஅதிபராக:- 16.01.2006 - 27.12.2007

கல்லூரியின் பழைய மாணவியாகவும் கல்லூரியின் நீண்டகால ஆசிரியையாகவும் சேவையாற்றிய திருமதி காந்திமதி சிவநேசன் அவர்களது சேவையையும், கல்லூரியில் ஆற்றிய சமயப்பணியையும் பாராட்டி பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறோம்.

ஆசிரிய நலன்புரிக்கழகம்
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி.
(69430)

## கண்ணீர்க் காணிக்கை



எமது ஆருயிர் நண்பன்
பகிதாஸின் பாசமிகு தந்தை
**சுப்பிரமணியம் சிவலிங்கம்**
(பிரபல ஒப்பந்தகாரர்)
24.12.2007 அன்று காலமாகிவிட்ட துயரச் செய்தியால் துயருற்றிருக்கின்ற அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம், கைதடி.
(69435)
சக மாணவர்கள் A/L 2009.

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர்
**அழகரெத்தினம் பற்குணநாதன்**
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி **வள்ளிப்பிள்ளை அழகரெத்தினம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நகரசபை அலுவலகம், சாவகச்சேரி. (சி/54830)
ஊழியர் நலன்புரிச் சங்கம், சாவகச்சேரி நகரசபை.

## கமலக்கண்ணன் திருமணசேவை

76, 73ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றமுள்ள, பாவம் குறைந்த, கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகன்களுக்கும், 74ஆம் ஆண்டு, பாவம் குறைந்த, சட்டத்தரணியாக கொழும்பில் பணிபுரிபவருக்கும் 73, 79ஆம் ஆண்டு, பிரான்ஸ், பாவம் குறைந்த மணமகன்களுக்கும் 79ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றமற்ற, பாவம் 87, 80ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றமுள்ள பாவம் 85, டாக்டர் மணமகன்களுக்கு படித்த, அழகான மணமகள்கள் தேவை. மேலும் டாக்டர்கள், எஞ்சினியர்கள், பட்டதாரிகள், லிகிதர்கள், வர்த்தகர்கள், பாவம் குறைந்த மணமக்களும், பிராஜாவுரிமை பெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளன.

தொடர்பு:
171/7, நல்லூர் வடக்கு வீதி,
மனோன்மணி அம்மன் கோயிலடி,
நல்லூர். T.P.:077 6070862.
(69438)

## மணமகன் தேவை

யாழ்.இந்துகௌரவ குடும்பம், 1979, B.A. பட்டதாரி, உதயத்துச் செவ்வாய், திருவோணம், பாவக்கிரகம் 85 உடைய மணப்பெண்ணிற்குத் தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு: சிவசெந்தில்நாதன் (செந்தில்)
(69437) நீண்டியம்பற்றை, புலோலி.

## ஆள் தேவை

ஆண், பெண் இருபாலாருக்கும் ஆடைகள் தைக்க மற்றும் கட்டிங் தெரிந்த இருபாலாரும் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: ஆராஸ் ரெயிலரிங்
இல.19, கண்டி வீதி,
சாவகச்சேரி. (சி/54825)

## தவறிவிட்டது

இல.08, மூன்றாம் குறுக்கு, பாசையூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த மரியதாஸ் மேரிஜெசில்டா என்பவரது தேசிய அ.அட்டை (776480886V), விசேட அ.அட்டை என்பன 25.12.2007 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/54829)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தரத்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்ற
யா/வதிரி திருஇருதயக் கல்லூரி மாணவியான
**யோகேஸ்வரன் - உமாவதி** தம்பதியரின் புதல்வி
**செல்வி யோ.நிரோஜா**
அவர்களை மென்மேலும் பற்பல பட்டங்கள் பெற்றுச் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துவதோடு இவரைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் விசேடமாகக் கற்பித்த திருமதி கமலதாஸ் சுசிகலா அவர் களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
(69431) வாழ்த்துவோர்: உறவினர்கள்.

## பரி.கன்னி மரியாள் ஆலயம் - கோப்பாய் மத்தி பாலர் பாடசாலை ஆசிரியை தேவை

எமது பாலர் பாடசாலைக்கு ஆசிரியை ஒருவர் தேவை. விண்ணப்பத்தை 02.01.2008இற்கு முன்னர் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**பரி.கன்னி மரியாள் ஆலயம்**
கோப்பாய் மத்தி, கோப்பாய்
(அங்கிலிக்கன் திருச்சபை).
(69434)

## மரண அறிவித்தல்

*திருமதி இராசலட்சுமி சபாரத்தினம்*

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசலட்சுமி சபாரத்தினம் நேற்று (27.12.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், திருச்சிற்றம்பலம், இந்திரா, சிவசோதி, சுப்பிரமணியம், தேவராணி, காலஞ்சென்ற ஜெயக்குமார், தனபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவனேஸ்வரி (கேளி), காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, உமாபதி, ஜெகசோதி, காலஞ்சென்ற சிவலிங்கம், காலஞ்சென்ற லோஜினி (ரதி), நிமலநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுமதி, ஜனார்த்தனன், சஞ்சேதனன், சூரியகுமாரன், விஜயகுமாரன், சுரேஷ்குமாரன், தயாளினி, கேதீஸ்வரன், தமயந்தி, கிசாந்தினி, இந்துமதி, கீதா, கவிதா, மீரா, சகிரா, மதுரா, கபில், சிந்தியா இராகுலன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஐஸ்வரியா, கஸ்மிதா, டிலானி, தர்சன், டயான்சன், சுமித்தா, றிசிகேஷ், அஸ்வினி, சந்தோஷ், அருண், சிவானி, பானுகா, தாரணி, சினேகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2007) வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ.தாமோதரம்பிள்ளை (மகள்),
ச.தனபாலன் (மகன்),
தா.விஜயகுமாரன் (விஜி - பேரன்).
பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி.
(69439)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரூபவாஹினி அலுவலகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் உறவுகள் மற்றும் மனிதவள பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தனது உரைக்கு ரூபவாஹினியில் முக்கியத்துவம் கொடுக்கப்படாதமை குறித்து முறையிடுவதற்க்க நேற்றுக்காலை ரூபவாஹினிக்குச் சென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆழிப்பேரலை அனர்த்தத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றவேளை அமைச்சரும் அதில் கலந்து கொண்டிருந்தார்.

குறிப்பிட்ட நிகழ்வில் தான் ஆற்றிய உரைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று தெரிவித்த அமைச்சர் மேர்வின், அது குறித்து செய்திப் பணிப்பாளரிடம் முறையிட்டுவிட்டு அவரைத் தாக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

"மேர்வின் சில்வாவும் அவரது குழுவினரும் காலை 10.05 மணியளவில் ரூபவாஹினியின் செய்திப் பிரிவிற்கு வந்தனர். அமைச்சரின் உரை ஒளிபரப்பு செய்யப்படாதமை குறித்து முறையிட்டனர். பின்னர் திடீரென அமைச்சர் என்னை கழுத்தில் பிடித்து எமது நிறுவனத் தலைவரின் அறைக்கு இழுத்துச் சென்றார். அங்கு வைத்து என்னைத் தாக்கினார். நான் வெளியே வரமுயன்றேன். எனினும் அமைச்சரும் அவரது குழுவைச் சேர்ந்த ஒருவரும் என்னை பிடித்து வெளியே இழுத்துத் தாக்கினர்" என செய்திப்பணிப்பாளர் டி.எம்.ஜி.சந்திரசேகர தெரிவித்தார்.

தமது செய்திப் பணிப்பாளர் தாக்கப்பட்டமையால் சீற்றமடைந்த ரூபவாஹினி ஊழியர்கள் அமைச்சர் மேர்வின் சில்வாவை சூழ்ந்து கொண்டு அவரை தாக்க முற்பட்ட போது அமைச்சர் ஓடிச்சென்று நிறுவனத் தலைவரின் அறைக்குள் தஞ்சம் புகுந்தார்.

### மன்னிப்பு அல்ல; கவலை

அதன் பின்னர் அந்த அறையை சுற்றிவளைத்த ஊழியர்கள், குறித்த சம்பவத்துக்காக மேர்வின் சில்வா மன்னிப்புக்கோர வேண்டும்என்று கேட்டனர்.தவறினால் அறையை விட்டு வெளியே வரும்போது அடிவிழும் என எச்சரித்தனர்.

ஆனால், செய்திப்பணிப்பாளரைத் தாக்கியமைக் காக மன்னிப்புக்கோர மறுத்த மேர்வின் சில்வா 'வேண்டுமானால் அந்தச் சம்பவத்துக் காக கவலை தெரிவிக்கிறேன்' - என்று பதிலளித்தார்.

அவரை அங்கிருந்து மீட்டுச்செல்வதற்கு படையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

### ஊடக அமைச்சரின் கண்டனமும் உத்தரவும்!

ரூபவாஹினியின் செய்திப்பணிப்பாளர் தாக்கப்பட்டமையை தாம் கண்டிப்பதாக தெரிவித்த ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவை பொலிஸார் அழைத்துச்செல்வதற்கு அனுமதிக்குமாறு ரூபவாஹினி ஊழியர்களுக்கு உத்தரவிட்டார்.

'இது ஒரு துரதிஷ்டவசமான சம்பவம். நடக்கக்கூடாத நிகழ்வு'-என்றும் அவர் விவரித்தார். எனினும் ஊழியர்கள் மசிந்துகொடுக்கவில்லை. அதனால் ரூபவாஹினி தலைவரின் குளிரூட்டப்பட்ட அறைக்குள் சுமார் மூன்று மணித்தியாலங்கள் 'அறைக்கைதி' யாக இருந்தார் மேர்வின் சில்வா. இதற்கிடையில் ஆத்திரமடைந்த ஊழியர்கள் குளிரூட்டியையும் நிறுத்தினர்.

### இராணுவத்தினர் அதிரடி ஊழியர்கள் தர்ம அடி!

நிலைமை மேலும் மோசமடையும் நிலை ஏற்பட்டதையடுத்து இராணுவத்தின் விசேட பிரிவு ஒன்று (பணயக் கைதிகளை மீட்கும் பிரிவு) களத்தில் இறக்கப்பட்டது. கூட்டுத்தாபன வளாகத்தைச்சுற்றி கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

பணயக்கைதிகளை மீட்கும் பிரிவும், சிவிலுடையணிந்த பொலிஸாரும் ரூபவாஹினி ஊழியர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அதிரடியாக நுழைந்து அமைச்சரை வெளியே மீட்டுவந்தனர். இவ்வாறு வெளியே கூட்டிவரப்பட்ட சமயம் கூட்டுத்தாபன வளாகத்துக்குள் நின்ற ஊழியர்கள் அமைச்சரை சுற்றிவளைத்துத் தாக்கத் தொடங்கினர். ஊழியர்களின் அடியில் மேர்வின் சில்வாவுக்கு மண்டையுடைந்து இரத்தம் வழிந்தது. அமைச்சரின் வாகனத்தை நோக்கியும் கற்கள் வீசப்பட்டன. அமைச்சரின் வெள்ளை நிற ஆடை மீது சிவப்புநிறச் சாயமும் ஊற்றப்பட்டது. ஆண்கள் மட்டுமல்லாது ஊழியர்களான பெண்களும் இந்தத் தாக்குதலில் பங்கேற்று தமது பங்களிப்பை வழங்கினர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஊழியர்கள் கடுமையாகத் தாக்கியதில் மண்டை உடைந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்த நிலையில் அமைச்சர் மேர்வின் சில்வா அவரது வாகனத்தில் ஏற்றப்பட்டு அங்கிருந்து வெளியே கூட்டிச் செல்லப்பட்டார். பின்னர் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அமைச்சரின் தலையில் ஐந்து தையல்கள் போடப்பட்டதுடன் உடல் முழுவதும் இருந்த உட்காயங்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் அமைச்சருடன் கூட வந்திருந்தவர்களில் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். (அ-சி)

## நன்றித்துதி ஆராதனை

தோற்றம் 02 - 04 - 1945



மறைவு 28 - 11 - 2007

கர்த்தருக்குள் நித்திரையடைந்த

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

**பண்பும் பாசமும் மிருந்திடும் அப்பா**
**மாதம் ஒன்று கழிந்து**
**இன்னமும் உங்கள் முகம் மாறவில்லை அப்பா**
**பாசத்தோடு எம்மை காத்து வந்தீர்கள்**
**பாதியிலே பரிதவிக்கவிட்டு சென்றீர்களே அப்பா**
**மங்காப் புகழ்பெற்று திகழ்ந்தீரே**
**சிற்பக்கலை ஞானபூபதி பட்டமும் பெற்றீர்களே**
**பலவகை சிற்பங்கள் செதுக்கி பலரின்**
**கண்களைக் குளிரவைத்தீர்களே! இப்போ**
**எல்லோர் கண்களிலும் கண்ணீரைப் பாரப்பா**
**பாசமிக்க என் தலைவா! கதறுவதே பிள்ளைகள்**
**இனி உங்கள் முகம் பார்ப்ப தெப்போது?**

31 ஆம் நினைவுநாள் நன்றித்துதி ஆராதனை இன்று (28.12.2007) வெள்ளிக்கிழமை பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகைதந்து அன்னாரது நன்றித்துதி ஆராதனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

*109B, நாயன்மார் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (69458)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராமநாதன் புஸ்பமணி

புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் புஸ்பமணி 26.12.2007 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-பொன்னம்மா தம்பதியினரின் மகளும்காலஞ்சென்றவிணாசித்தம்பி-நாகம்மாதம்பதியினரின் மருமகளும் இராமநாதனின் (V.R.M) மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30, றோகினி வீதி,*
*கொழும்பு 6.* (69462)

தகவல்:
**சி.இரத்தினசபாபதி**
(ஓய்வுபெற்ற அதிபர்)

### நல்லதம்பி சுப்பிரமணியம்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சுப்பிரமணியம் நேற்று (27.12.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி-சின்னதங்கச்சி தம்பதியினரின் மகனும், அப்பாத்துரை-சின்னம்மா தம்பதியினரின் மருமகனும், சுந்தரேஸ்வரியின் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசபை, வேலாயுதம்பிள்ளை, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான மதியாபரணம் (ராசாத்தி), சிவபாதசுந்தரம், மகேஸ்வரி, ஞானேஸ்வரி மற்றும் சண்முகநாதன், மகாதேவன், பரமேஸ்வரி, ஞானேஸ்வரன், திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும், சண்முகேஸ்வரன், ராஜேஸ்வரி (சுவிஸ்), ரேணுகேஸ்வரி, காலஞ்சென்ற சுந்தரேஸ்வரன் மற்றும் கோமலேஸ்வரி, சுகந்தி, வெங்கடேஸ்வரன் (சுவிஸ்), கணேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையாரும், மனோகரனின் பெரிய தகப்பனாரும், சகுந்தலாதேவி, குகானந்தன் (சுவிஸ்) , முத்துராசா, பாமினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், நிதர் சன், நிதூர்சன், சுந்தரீசா (சுவிஸ்), பிரியந்தி, சிவாத்மிகா, சுவாகி, ஹரினி, இந்துஜன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.12.2007) வெள்ளிக்கிழமை பி.ப 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (69460)

தகவல்:
**குடும்பத்தினர்**

**COLLEGE Of Accounting**
பலாலி வீதி, திருநெல்வேலி
A/L 2010 நாளை ஆரம்பம்
கணக்கீடு (அடிப்படையிலிருந்து)
Sat&Sun (9-10 am)
by J.T. ... B.Com (Acc Spl)

## மரண அறிவித்தல்கள்

### சிவானந்தன் சுஜிந்தன்

நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை சொந்த இடமாகவும் குருமன்காடு, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தன் சுஜிந்தன் நேற்று (27.12.2007) வியாழக்கிழமை வவுனியாவில் அகாலமரணமானார்.

அன்னார் பொன்னுத்துரை சிவானந்தன்-புஸ்பராணி தம்பதியினரின் அன்பு மகனும், பிலுஜா, நிசாந்தன், துசாந்தன், பிரியங்கா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் துக்கநிகழ்வு கேணியடி, கொக்குவில் மேற்கிலுள்ள பெரியதந்தை வீட்டில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில் (69463)

தகவல்:
**த.இரத்தினேஸ்வரன்**
(பெரியதந்தை-J/127 GS)
**பொ. சிவானந்தன்**
(தந்தை-சாரதி, G.T.Z )

(69463)

### திருமதி பரிமளம் கந்தையா

[இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்]

மீசாலை வடக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் கந்தையா நேற்று (27.12.2007) சிவபதமடைந்தார்.

அன்னார் ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமு கந்தையா (பரிமளம், இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், கலாநிதி (ஆசிரியை) கருணாநிதி, காலஞ்சென்றவர்களான தயாநிதி, கருணாகரன், தயாபரன் ஆகியோரின் அன்புத் தாயும், அமரர் குகதாசன் (Electrical Superintendent - CEB), அமரர் ஜெயமகா (பொலிஸ்திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹர்சன், அனேஜா, தர்மஜா, தயாளன் (Faculty of Information Technology University of Moratuwa), தர்சன் (Research Assistant, Shanthiham, Jaffna), தனுஷன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துசிவர்மன், தயானந்தி, தினேஸ்வர்மன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2007) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*

தகவல்:
**ஆ.தயாளன்**
(பேரன்)

### இ.வேலுப்பிள்ளை கந்தசாமிப்பத்தர்

[முன்னாள் ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான தர்மகத்தா சபைத் தலைவர்]



நாச்சிமார் கோவிலடி, மதவடிலேனைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமிப்பத்தர் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் வேலுப்பிள்ளை-தங்கம்மா ஆகியோரின் இளைய புதல்வனும், செல்லத்துரை (இராசுக்குட்டிபத்தர்)-வள்ளியம்மை ஆகியோரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், வேலுப்பிள்ளை இராமலிங்கத்தின் சகோதரரும், சாந்தகுமாரன் (தீயணைப்புப் பிரிவு, யாழ்.மாநகரசபை), தேவகுமாரன் (Rex photo), லிங்ககுமாரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்புலட்சுமி, தங்கராணி, மதிவதனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காயத்திரி (ஆசிரியை) , கங்கா, சிவாஜினி, சாந்தினி, மணிகண்டன், அபிராமி, செந்தூரன், ஜனனி, ஜகிஷன், லாவர்ணன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் தியாகராஜா, தங்கராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.12.2007) வெள்ளிக்கிழமை நடைபெற்று பி.ப 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*555/3, கே.கே.எஸ் .வீதி (மதவடிலேன்),*
*நாச்சிமார் கோவிலடி ,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சாந்தகுமாரன் (மகன்),
தேவகுமாரன் (மகன்).

### தம்பையா நவரத்தினம்



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட தம்பையாநவரத்தினம் நேற்று (27.12.2007) வியாழக்கி ழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற சற்குணத்தின் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2007) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் சகோதரியின் (மாம்பழம்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி லேன்,
தாவடிவடக்கு,
கொக்குவில் (64464)

தகவல்:
**வேலாயுதபிள்ளை**
**சரஸ்வதி (மாம்பழம்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு சுதந்திர ஊடக அமைப்புகள் கண்டனம்

கொழும்பு, டிச. 28

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் கட்டாயம் அரச தரப்பினரின் செய்திகளை ஒளிபரப்ப வேண்டும் என்று எதிர்பார்ப்பது அரசியல்வாதிகளிடமுள்ள தவறான கண்ணோட்டம்.

அரச ஊடகமான ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் புகுந்து அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட்ட கோஷ்டியினர் புரிந்த அடாவடித்தனத்தைக் கண்டித்து, சுதந்திர ஊடக அமைப்பு உட்பட்ட ஐந்து அமைப்புகள் இணைந்து கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நேற்றுக்காலை மேர்வின் சில்வா ரூபவாஹினித் தேசியத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்துக்குள் தனது அடியாட்களுடன் உட்புகுந்து அங்கிருந்த செய்திப் பணிப்பாளர் ரி.எம்.ஜி. சந்திரசேகரவைத் தாக்கி நிலத்தில் இழுத்துக்கொண்டு சென்றமைக்கு எங்கள் அமைப்பு பெரும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அமைச்சர் தொடர்பான செய்தியொன்றை ஒளிபரப்புச் செய்யவில்லை என்பதைக் காரணம் காட்டியே இந்தத் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் அரச கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்கள் தமது செய்திகளை முன்னுரிமை அடிப்படையில் ஒளிரப்ப வேண்டும் என்ற அதிகாரத்திலுள்ளவர்களின் பிழையான கண்ணோட்டத்தைக் காட்டுகின்றது.

உண்மையில் இந்த அரச கட்டுப்பாட்டிலுள்ள பொதுசன ஊடகங்கள் அரசியல் மற்றும் வர்த்தக அழுத்தங்களுக்குட்படாது மக்கள் சேவை ஊடகமாக இருக்க வேண்டுமென்பதை எமது அமைப்பு வலியுறுத்துகிறது.

பொதுசன ஊடகமொன்றுக்கு எதிராக இவ்வாறான பலாத்காரச் செயற்பாடுகள் இதற்கு முற்பட்ட காலங்களில் நடைபெறவில்லை. ஊடக நிறுவனமொன்றுக்குள் புகுந்து அங்குள்ள அதிகாரியொருவரைத் தாக்குவதற்கு தனக்கு அதிகாரமிருக்கிறது என்று அரசியல்வாதி ஒருவர் சிந்திப்பது நாட்டில் சட்டச் செயற்பாடுகள் கீழ்நிலையிலிருப்பதையே காட்டுகிறது. அதுபோலவே கூட்டுத்தாபன ஊழியர்களும் சட்டத்தைக் கையிலெடுக்க வேண்டி நேர்ந்தமையானது சட்டக்கட்டுப்பாடு மீதான நம்பிக்கையீனத்தினாலேயே என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நினைவுச் சொற்பொழிவு

யாழப்பாணம்,டிசெ.26

பிரபல ஊடகவியலாலர் அமரர் அஜித்சமர நாயக்காவின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு யாழ்.வேம்படி வீதியிலுள்ள அகவிழி காரியாலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 4மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த ஏ.சி ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த சொ.சிவாலன் 'சமதர்ம இயக்கமும் ஏழுதாசப்தங்களும்' என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

# அதிரடிப்படைச்சிப்பாய் பலி

கொழும்பு, டிசெ.28

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் விசேட அதிரடிப்படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 7.50 மணியளவில் பிரதான வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் கிளைமோர்க் குண்டு பொருத்தப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்தவர் களுவாஞ்சிக்குடி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (சி)

## மூன்று படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 8 மணியளவில் அவதானித்த படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

அதன் பின்னர் நடந்த சண்டையில் இரண்டு புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

பரஸ்பரம் இடம்பெற்ற மோதல்களில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றிருவர் காயம் அடைந்தனர் என்று ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மன்னார் பாலைக்குச்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது மற்றொரு இராணுவச் சிப்பாயின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட இரு சடலங்களையும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் புலிகள் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த மோதல் தொடர்பாக படைத்தரப்பு எவ்வித தகவல்களையும் நேற்றுமாலைவரை வெளியிடவில்லை. (அ-1)

## வணிக பீடத்தின் இறுதிப்பரீட்சை ஜன. 3இல்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட இறுதி ஆண்டுப் பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறும் எனப் பீடாதிபதி அறிவித்துள்ளார். மேலதிக விவரங்களைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். (1)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவ இடத்திலேயே மூன்று ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் உயிரிழக்க, 12 வயதுச்சிறுமி, பொலிஸ் கான்ஸ்டபிள், மற்றொரு ஈ.பி.டி.பி. உறுப்பினர், வாகனச் சாரதி என நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பலனின்றி சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம் என ஈ.பி.டி.பி. மற்றும் படைத்தரப்புகள் குற்றஞ்சுமத்தியுள்ளன.

## உலக நாடுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருக்கின்றனர்.

பெனாஸிரின் படுகொலையை அடுத்து பாகிஸ்தான் நிலைமைகுறித்து ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை நேற்றிரவு அவசரமாக கூடியது. இந்தப் படுகொலையை கண்டித்திருக்கின்ற அமெரிக்கா, பாகிஸ்தானில் ஒரு நல்லிணக்கம் ஏற்படுவதை குலைக்கும் சில சக்திகள் அங்கு இன்னமும் இருப்பதனையே இது காட்டுவதாக கூறியிருக்கின்றது.

"பாகிஸ்தானில் ஜனநாயக வழிமுறைகளை தொடர்வதுதான் பூட்டோவுக்கு செலுத்தும் மரியாதையாக இருக்கும்" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச்.டபிள்யூ.புஷ் கூறியுள்ளார்.

இந்தப் படுகொலை, உணர்வற்ற ஒரு செயல் என்று பிரிட்டன் தெரிவித்திருக்கின்றது. அத்துடன் பாகிஸ்தானில் நிதானமும் ஒற்றுமையும் தேவை என்றும் அது குறிப்பிட்டிருக்கின்றது.

படுமோசமான நடவடிக்கை என்று இதனை கண்டித்திருக்கும் இந்தியா, தனது அதிர்ச்சியையும் வருத்தத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றது. இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் "பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்கு பெனாஸிர் வழிசெய்தார்" - என்று புகழாரம் சூட்டியுள்ளார். (அ-2)

## பெனாஸிர் பூட்டோ படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கைக்குத் திரும்பும்போதே தற்கொலைக் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தப்பட்டது.

முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுடன் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் தலைவர்கள் பலர் கோரமாகப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதனால் ராவல்பிண்டியில் பெரும் பதற்றம் நிலவியது. சுமார் 4 கிலோ கிராம் எடையுள்ள வெடி குண்டே தற்கொலைதாரியால்வெடிக்க வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்களில் ஒருவரான நவாஷ் ஷெரீப் பெனாஸிரின் சடலம் வைக்கப்பட்டிருந்த ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்று அதற்கு அருகே மௌனமாக அமர்ந்திருந்தார்.

பின்னர், ஜனவரியில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தலை பகிஷ்கரிக்கப்போவதாக அவர் அறிவித்தார். ஜனாதிபதி முஷராப் உடனடியாக பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாட்டின் பல பகுதிகளிலும் கலவரம் பரவத் தொடங்கியதை அடுத்து ஜனாதிபதி முஷாரப், மூன்று நாள் துக்கதினத்தை அறிவித்தார். பாதுகாப்புப் படைகள் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக பெனாஸிர் பூட்டோவின் கவனத்திற்கு கொண்டுவந்தபோதும் அவர் அதனை பொருட்படுத்தாது தேர்தல் பிரசார நடவடிக்கை யில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2-சி)


மதுரம் இன்ஸ்ரிரியூட்
பருத்தித்துறை வீதி, 3ஆம் கட்டை, கட்டப்பிராய் ஒராண்டு நிறைவில் யாழின் மிகப் பிரபல ஆசிரியர்களின் ஒருமித்த சேவையில் சிறப்பாக இயங்கும் எமது நிறுவனத்தில்
2010 A/L
கலை, வர்த்தகப்பிரிவுகள்
ஆரம்பம்: 02.01.2008 - மாலை - 3மணி
அனுமதிகள் வழங்கப்படுகிறது.
அலுவலக நேரம்: திங்கள் தொடக்கம் சனி வரை 3.00-5.00

THE SCIENCE CORNER
2010 A/L
CHEMISTRY
பொது இரசாயனம்
ஆரம்பம் -29.12.2007
Sat / Sun (3.30-4.30)Pm
By: RAJAH

இலவசக்கணனிப்பயிற்சி
MCS Supported By UNDP/JRRP
O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கானது
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தின் விசேட கணனிப் பயிற்சித் திட்டம்.
பதிவுகள் 29-12-2007 முதல் நேரில்
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம்

IDM
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட தனித்துவமான கணனிக் கல்லூரி
O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு விசேட சலுகைக்கட்டணம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
இன்றே அருகில் உள்ள IDM கிளைகளை நாடுங்கள்.
(MS. OFFICE, DTP, HARDWARE, AUTOCAD, E-KIDS)
யாழ்ப்பாணம் - 216, நாவலர் வீதி.
மானிப்பாய் - முனாமலை லேன் (மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
நெல்லியடி - கொடிகாமம் வீதி, (பஸ் நிலையத்துக்கு அருகாமையில்)
Phone - 021 222 9901
Web: www.idm.org / www.idm.edu

BEACON
A/L 2010
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் 05.01.2008

ONLY
Auto CAD students
Personal & visiting classes
3D-Modeling (Mechanical Drawings)
5 in 1 Punch 3D Home Designing(civil)
3D-Home Architect(Civil Drawings)
K.N.Muguntha (D/A)
Registered Draughtsman
Mathavady Lane
Kondavil East Kondavil
Tel:-0776055574 E-Mail:-Mugunth1971@yahoo.com
4590607

SCC
G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
கணனிப் பயிற்சி நெறிகள்
சிறப்புக் கட்டணச் சலுகையில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
28.12.2007, 05.01.2008
55, Arasady Road, Jaffna.

NEW SCIENCE CENTRE
யாழ் நகர்
2010 A/L
CHE - அன்பு
PHY - செல்வன்
Maths - சிவகரன்
- கண்ணன்
Bio - அல்போன்ஸ்
- பிரபல ஆசான்
Propritor:- Poobalasingum
ஆரம்பம் 29.12.2007 சனி 8.30,
8.30 - CHE, 9.30 - Bio/ Maths,
11.00 - PHY

BRIGHBTMAN
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
By: 
ஆரம்பம்:- 29/12/2007
Sat/Sun-3.00 Pm

2010 A/L
CHEMISTRY
(Group Class)
★GENERAL
★BASIC
ஆரம்பம்: 01.01.2008
செவ்வாய்: 4 p.m.
பிரிவு 1 புத,வெள் - 4.00
பிரிவு 2 சனி, ஞாயி - 2.00
DIAS
B.Sc. (Hons) Spl in Chem
College Of Chemistry
32, Rd.

Microsoft Certified Systems Engineer
இணையவழிப் பரீட்சைகள் இப்பொழுது யாழில்....
★ Network Manager, System Admin தொழில் வாய்ப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
MCS Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.





INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
RDS Building, K.K.S Road, Mallakam.
Website : www.iitjaffna.com
TP : 021 4591920 Email : iit@iitjaffna.com
கணனிக்கற்கைநெறிகளுக்காக IIT வழங்கும்
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2008
IIT ... 90%, 75%, 50%, 30% ...
- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Software Engineering
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Networking
- Diploma in Web Designing
- Diploma in Video Editing
- Diploma in Internet & Email
- Diploma in Maya
- Diploma in AutoCAD
- Diploma in ArcView GIS
காலம் 30.12.2007
மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org